காவிரிப்பூம்பட்டினம்



காவிரிப்பூம்பட்டினம்

✕

ஆசிரியர்:
தென்னாட்டு ஆராய்ச்சிப் பேரறிஞர்
திருவாளர் டி. வி. சதாசிவ பண்டாரத்தார்
அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறை விரிவுரையாளர்.

✕

வெளியீடு:
மாதவி மன்றம்
மேலப்பெரும்பள்ளம்.

முதற் பதிப்பு: 1959

★

கிடைக்குமிடம்:
செயலாளர்,
மாதவி மன்றம்,
மேலப்பெரும்பள்ளம் அஞ்சல்,
(வழி) திருவெண்காடு, தஞ்சை (மாவட்டம்.)

விலை ரூ. 1-25

விக்டோரியா அச்சகம், மாயூரம். போன் 127

பதிப்புரை

உலகில் உள்ள நாடுகளுள் தமிழ் நாடு பண்பாடுடைய நாடு; நாகரிகத்தில் உயர்ந்த நாடு; பழம்பெரும் நாடு; என் தாய்த் திருநாடு. இங்குச் சிறப்புற வாழ்ந்த சோழர்களுடைய தலைநகராய் விளங்கிய காவிரிப்பூம்பட்டினம். இந்நாளில் பொலிவிழந்து காணப்படுதல் கண்டோம்; மீண்டும் சிறப்புற வேண்டும் என்று எண்ணி "மாதவி மன்றம்" அமைத்தோம்; நாடு வளம்பெற - மக்கள் அறிவு வளம் பெருகப் பணிசெய்வதே அம்மன்றத்தின் நோக்கம். அது சிலம்பின் வளத்தை மக்கட்குப் புலப்படுத்தியுள்ளது; இப்போது புகாரின் வரலாற்றைத் தக்க அறிஞரைக் கொண்டு ஆராய்ச்சி முறையில் உண்மைகளைத் தெளிவு படுத்தியுள்ளது.

இவ்வரும் பெரும் ஆய்வுப் பணியை மேற்கொண்ட பேரறிஞர் திருவாளர். T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் தம் நுண் மாண் நுழைபுலத்தால் ஆராய்ச்சி வாழ்வில் கண்டு தெளிந்த உண்மைகளைக்கொண்டு காவிரிப்பூம்பட்டினத்தின் வரலாற்றை எழுதி உதவியுள்ளார்கள்; முதுமையுற்ற காலத்தும் இவ் வரலாற்றை எழுதித் தரவேண்டும் என்று கேட்டவுடன் மகிழ்ச்சியெய்தி எழுதித் தர முன்வந்தார்கள்; நேரில் வந்து கண்டு தெளிந்து நல்ல முறையில் எழுதி உதவினார்கள். அவர்களது தமிழ்ப் பணிக்கு மன்றம் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. நீண்ட நாள் தமிழகத்தில் வாழ்ந்து, தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் வேண்டும் பணி செய்யும் ஆற்றலையும், திறனையும் எம் தமிழ்த் தாய் அளித்தருள வேண்டுகிறோம்.

இந்நூலை எழுதித் தருவதற்குத் தக்க அறிஞரைத் தேர்ந்தெடுத்து அதைச் செயற் படுத்த வேண்டி ஊக்கியவரும்

எனக்கு அவ்வப்போது செய்யத்தக்கப் பணிகளுக்கு வேண்டும் குறிப்புக்களை நல்கியவரும் ஆகிய பெருந்தகை யாளர் தவத்திரு. மாணிக்கவாசக அடிகளார் அவர் களுக்கும் என் நன்றி உரியதாகும்.

இந்நூலுக்குத் தேர்ந்தெடுத்த படங்கள் ஏழையும் 'பிளாக்' செய்து தரும் பொறுப்பை ஏற்று உரிய காலத்தில், சிறந்த முறையில் செய்து உதவிய சென்னை, பாலு சகோதரர்களுக்கும், அட்டைப் படத்திற்குரிய "பிளாக்கை" அனுப்பி உதவிய "கலைக்கதிர்" பொறுப்பா ளருக்கும், காவிரிப்பூம்பட்டினத்தின் நிலப் படத்தையும், கண்ணகியின் படத்தையும் வரைந்து 'பிளாக்' செய்து உதவிய பி. ஜி. கே. சகோதரர்களுக்கும் இந் நூலை அழகிய முறையில் அச்சியற்றித் தந்த "விக்டோரியா அச்சகத்தா ருக்கும்" என் நன்றி உரித்தாகும்.

முடிவாக, காவிரிப்பூம்பட்டினம் பழமை வாய்ந்த நகரம் ஆகும். இதுபோல் பழமை வாய்ந்த நகரங்களில் புதை பொருள் ஆராய்ச்சி நிகழ்த்திப் புதுமை கண்டுள் ளார்கள். நமது அரசாங்கம் காவிரிப்பூம்பட்டினத்தில் மட்டும் அத்தகைய ஆராய்ச்சி நிகழ்த்த முன்வரவில்லை. பழைய சின்னங்கள், இடிந்த கட்டிடங்களின் நீண்ட சுவர்கள் புதைந்துள்ள பெருந் திடல்கள் இன்றும் இங்கு உண்டு. இவ்விடங்களில் சென்னை அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் புதைபொருள் ஆராய்ச்சி செய்ய முன்வரின் பல பழைய வரலாற்று உண்மைகள் புலப்படும் என்பது உறுதி. புகார் நகர மக்களுடைய உழைப்பும் ஆதரவும் என்றும் உண்டு என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

இதைச் செயற்படுத்த அரசினரை வேண்டுகிறோம்.

மேலப்பெரும்பள்ளம்,
15—5—1959.

நா. தியாகராசன்,
செயலாளர். "**மாதவி மன்றம்**"

உ

அணிந்துரை

தமிழ் வேந்தர் மூவருள்ளும் சோழ மன்னர்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்கள். வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் பெருவளமும் பொதியிலும் இமயமும் போலத் தவ ஞானிகளுக்கு உறையுளாக விளங்கும் பூம்புகார் நகரமுமே அவர்கள் சிறப்பு மிகுவதற்குக் காரணமானவை என்று கூறல் மிகை யாகாது. சோழகங்கம் ஏரி, வீரநாராயணன் ஏரி போன்ற ஏரிகளை அமைத்தும் காவிரி நதிக்குப் பல கிளைநதிகளை வெட்டுவித்தும் காவிரிக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே அணை அமைத்தும் சோழ நாட்டைத் தென்னாட்டின் நெற்களஞ்சியமாகச் செய்தவர்கள் சோழ மன்னர்களே. தவிரவும் வீரச்செருக்காலும் கொடைத் திறத்தாலும் தமிழ் ஆர்வத்தாலும் சமய உணர்வினாலும் அவர்கள் நம் நாட்டிற்குச் செய்துள்ள தொண்டுகள் அளவிட முடியாதவை. அன்னையும் பிதாவும் எனச் சோழ வள நாட்டையும் சோழ மன்னர்களையும் நாம் ஒவ்வொருவரும் போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

பூம்புகார் நகரத்தைத் துறைமுகப்பட்டினமாக அமைத்துக்கொண்ட சோழமரபினர், நாளடைவில் அதன் இயற்கை அழகில் ஈடுபட்டவர்களாகி அதனைத் தலைநகர மாகவே அமைத்தும் போற்றிவந்தார்கள். அசைந்து அசைந்து செல்லும் காவிரிநங்கையும், அந்நங்கையைப் பேரார்வத்தோடு தனது அலைக்கரங்களால் அணைத்துத் தழுவிக்கொள்ளும் குணகடலும் இன்றும் கண்கொள்ளாக் கவின்பெறு காட்சியாய் விளங்குவதை நாம் அறிவோம்.

அப்படிப்பட்ட பூம்புகார் நகரத்தின் பழைய அமைப்பினையும் சிறப்பினையும் எல்லோரும் அறிந்து மகிழ்தற் பொருட்டுக் "காவிரிப்பூம்பட்டினம்" என்ற இச்செந்தமிழ் நூலை எனது உழுவலன்பரும் வரலாற்று ஆராய்ச்சித் துறைப் பேரறிஞருமாகிய திருவாளர் டி. வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் அழகிய தமிழ் நடையில் எழுதியுள்ளார். அவர்களுடைய ஆராய்ச்சித்திறன் மேனாட்டு அறிஞர்களாலும் பாராட்டப் பெற்றுள்ளது.

இந்நூல் வெளிவருவதற்குக் காரணமாக இருக்கும் செந்தமிழ்ச் செல்வர் திருவாளர் என். தியாகராசன் அவர்களது பேரார்வமும் உலையாத ஊக்கமும், பொருட் செலவையும் கருதாது கருமமே கண்ணுகைச் செய்துவரும் தமிழ்த்தொண்டும் அறிஞர்கள் உணர்ந்து பாராட்டத் தக்கவையாகும்.

இந்நூலை எழுதி உதவிய பேரறிஞர் திருவாளர் டி. வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்களும் இந்நூலை வெளியிட்ட இளைஞர் திரு. என். தியாகராசன் அவர்களும், நீடு வாழ்ந்து செந்தமிழ்க்கும் பூம்புகார் நகரத்திற்கும் மேலும் மேலும் பெருந்தொண்டு செய்து சிறக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறேன்.

குருபூசை மடம்,
பூம்புகார்,
12—5—1959.

மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள்.

முகவுரை

பண்டைக்காலத்தில் நம் தமிழ் நாட்டை ஆட்சி புரிந்த தமிழ் வேந்தர் மூவருள் சோழமண்டலத்தைச் சிறப்பாக அரசாண்டவர்கள் சோழ மன்னர்கள் என்பது யாவரும் அறிந்ததே. அப்பெரு வேந்தர்கள் கடைச்சங்க காலத்தில் (ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்) தம் தலைநகர்களாகக் கொண்டு விற்றிருந்து செங்கோல் செலுத்திய திருவுடை நகரங்கள் உறையூரும் பூம்புகார் எனப்படும் காவிரிப்பூம்பட்டினமுமேயாம். அவற்றுள், உள்நாட்டுத் தலைநகராகிய உறையூரைக் காட்டிலும் பல்வகையாலும் சிறப்புற்று விளங்கியது கடற்கரைத் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினம் என்பது அறிஞர் பலரும் ஆராய்ந்துணர்ந்த முடிபாகும். இக்காலத்திலுள்ள பம்பாய், கல்கத்தா, சென்னை முதலான பெரு நகரங்களைப்போல முற்காலத்தில் நிலவிய இம்மாநகர், காலச் சக்கரத்தின் சுழற்சியினால் சிதைந்து போய், கடலில் ஒரு பகுதியாகவும் பல சிற்றூர்களாகவும் இப்போது காட்சி அளிக்கின்றது. எனினும், அவ்விடங்களில் இதன் பழைய வரலாறுகளை யுணர்த்தும் சின்னங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அன்றியும். சங்க நூல்களாலும் இதன் ஒப்பற்ற பழைய நிலையை நன்குணரலாம்.

இத்தகைய சான்றுகள் எல்லாவற்றையும் துணையாகக் கொண்டு 'காவிரிப்பூம்பட்டினம்' என்ற ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதித்தர வேண்டும் என்று மேலப்பெரும் பள்ளம் மாதவி மன்றச் செயலாளரும், அருங்கலைகளிலும் வரலாற்றாராய்ச்சியிலும் பெரிதும் ஆர்வமுடையவரும்,

சிறந்த பண்புடையவரும் ஆகிய அன்பர் திரு. என். தியாகராசன் அவர்கள் சில தினங்களுக்கு முன் கேட்டுக் கொண்டனர்; அன்றியும் அடிக்கடி வந்து தம் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் புலப்படுத்திக்கொண்டும் இருந்தனர்.

உண்மையான அன்பர்களின் நேர்மையான விருப்பத்தை மறுக்காமல் நிறைவேற்றும் இயல்புடைய யான், தக்க சான்றுகளுடன் இந்நூலை ஒருவாறு எழுதி முடித்தேன். இதுகாறும் யான் எழுதியுள்ள ஆராய்ச்சி நூல்கள் எல்லா வற்றையும் தமிழகம் பெரிதும் மதித்து ஏற்றுக் கொண்டமைபோல இந்நூலையும் ஏற்றுக்கொள்ளுமென்று நம்புகிறேன்.

இம் முயற்சியில் என்னை ஈடுபடுமாறு செய்து அணிந்துரை வரைந்தருளிய மேலையூர் அறுபத்துமூவர் திருமடத்து அருட்பெருந் திரு. மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும், அன்பர் திரு. என். தியாகராசன் அவர்களுக்கும் முறையே என் வணக்கமும் நன்றியும் உரியவாகும்.

இதனை எழுதி வெளியிடுங்கால் உறுதுணையாயிருந்து உதவி புரிந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர் அன்பர் திரு. க. வெள்ளைவாரணர் அவர்களை என்றும் மறவேன்.

இங்ஙனம்,

T. V. **சதாசிவ பண்டாரத்தார்.**

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்.

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுக லான்,



பத்தினிதேவி கண்ணகி

இளங்கோவடிகள் கூறியபடி செங்குட்டுவன் காலத்தே இலங்கையில் கயவாகுவால் சிலை எடுக்கப்பட்ட பத்தினியின் சரியான சாயலாகும்.
(Selected Examples of Indian Art, plate XXXIII, Pattini Devi.)



சம்பாபதி அம்மை (சாய்க்காடு)

காவிரிப்பூம்பட்டினம்

சோழமன்னர்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர் தமிழ் நாட்டை ஆண்டு வந்தனர். அம்மூவருள் சோழ மன்னர்கள் ஆண்ட பகுதி சோழ நாடு எனப்படும். அந்நாட்டில் வளங்கொழித்தோடுவது காவிரியாறு. காவிரி வளத்தால் சோழ நாடு பொருட்செல்வத்தில் சிறந்து விளங்கியது மட்டுமல்லாமல் கலைச் செல்வத்தாலும், அருட் செல்வத்தாலும் கூடப் பொலிவு பெற்று விளங்கியது. உலகம் முழுவதும் நாகரிகமே இல்லாமல் மக்களும் விலங்குகளும் ஒரு தன்மையாக வாழ்ந்த காலத்திலேயே சோழ மன்னர்கள் காவிரியாற்றுக்குக் கரையெடுத்தும் அணையிட்டும் கால்வாய்கள் செப்பனிட்டும் உணவுப் பெருக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது அறிஞர்கள் அறிந்ததே. அதுமட்டுமன்றி வீரச்செருக்கால் அயல்நாடுகளை வென்றும், வாணிபத்துறையில் உலக நாடுகளோடு தொடர்பு கொண்டும் கலைச்செல்வத்தால் நாட்டு மக்களுக்கு இன்ப வாழ்க்கையை வழங்கியும், சோழ மன்னர்கள் சிறப்புற்றார்கள்.

பூம்புகார்

சோழ மன்னர்க்குரிய தலைமை நகரங்களுள் ஒன்றாகவும் இந்நாட்டு வாணிக வளர்ச்சிக்குரிய கடற்றுறைப் பட்டினமாகவும் விளங்கியது காவிரிப் பூம்பட்டினம் என்ற பேரூர் ஆகும். இவ்வூர் சோழ நாட்டினைத் தாய்போற் பேணிக் காக்கும் நன்னீர்மை வாய்ந்த காவிரியாறு கடலொடு கலக்கும் நிலப்பகுதியில் அமைந்தமையால் புகார் எனவும், காவிரிப்பூம்பட்டினம் எனவும் வழங்கப் பெறுவதாயிற்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சி புரிந்த கரிகால்வளவன் காலத்தில் இந் நகரம் முழுப் பெருமையோடு வீறு பெற்று விளங்கியது. சுருங்கச் சொல்லின் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலண்டன் மாநகரம் எப்படி விளங்கியதோ, அதைவிட ஆயிரம் மடங்கு சிறப்பாகப் பூம்புகார் நகரம் விளங்கியதாக நாம் கூறலாம். பண்டைக் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய இந்நகரத்தின் பரப்பினையும் செல்வ வளத்தினையும் பிற சிறப்புக்களையும் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பண்டைத் தமிழிலக்கியங்களால் நன் குணரலாம். கி. பி. முதல் நூற்றாண்டில் மேனாட்டி னின்றும் தமிழ் நாட்டிற்கு வந்த யவன ஆசிரிய ராகிய தாலமி என்பவர் எழுதிய வரலாற்றுக் குறிப்பிலும்* அக்காலத்திலே மேனாட்டு வரலாற்று

* Annual Report on South Indian Epigraphy for 1918-19, part II, para 2.

ஆசிரியர் ஒருவரால் எழுதப்பட்ட "பெரிப்ளூஸ்" என்ற நூலிலும்* காவிரிப்பூம்பட்டினமாகிய இந் நகரத்தைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

கரிகாலன் அமைத்த மண்டபம்

உறையூரைத் தலைநகராகக்கொண்டு சோழ நாட்டை ஆட்சி புரிந்த கரிகால்வளவன், தனது நாட்டில் உணவுப் பொருளை நிறைய விளைவிக்க வேண்டும் என்ற நன்னோக்கத்தால் காவிரி யாற்றிற்குப் பெரிய கரையினை அமைத்தான். தனது நாடு வாணிகத் துறையிலும் வளம்பெறுதல் வேண்டும் என்ற பெருவேட்கையால் காவிரி கடலோடு கலக்குமிடத்தில் இயற்கைத் துறைமுக மாகவுள்ள இக் காவிரிப்பூம்பட்டினத்தைத் தான் அரசு வீற்றிருத்தற்குரிய தலைமை நகரங்களுள் ஒன்றாக அமைத்துக்கொண்டான். இவ்வேந்தர் பெருமான் இமயம்வரை படையெடுத்துச்சென்று பகைவர்களை வென்று இமயமலை முகட்டில் தன் அரசியல் அடையாளமாகிய புலி இலச்சினையைப் பொறித்துத் திரும்பியபோது, பகையும் நட்பும் இல்லாத அயலானாகிய வச்சிரநாட்டு மன்னன் தன்பால் உள்ள முத்துப்பந்தரைக் கப்பமாகக் கொடுத்தான். பகைமேற்கொண்டு வாட்போரில் எதிர்த்த மகதநாட்டு மன்னன் தோல்வியுற்றுத் தன்பால் உள்ள அழகிய பட்டிமண்டபத்தைத்

* Foreign Notices of South India, p 59.

திறையாகக் கொடுத்தான். முன்னமே நட்பினனாகிய அவந்தி வேந்தன் தன்னிடம் உள்ள தோரணவாயிலை உவப்புடன் கொடுத்தான். பொன்னினாலும் மணிகளாலும் நுண்ணிதின் அமைக்கப்பட்ட முத்துப்பந்தர், பட்டிமண்டபம், தோரணவாயில் ஆகிய இம் மூன்றையும் பெற்று வந்த கரிகால்வளவன் இவற்றைக் காவிரிப்பூம்பட்டினத்தில் நிலைபெற வைத்தான் எனச் சிலப்பதிகாரம் கூறும். அந் நூலில்,

"இருநில மருங்கிற் பொருநரைப் பெறுஅச்
செருவெங் காதலின் திருமா வளவன்
... ...
இமையவர் உறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்,
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்,
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபில் தோரண வாயிலும்,
பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர் நீங்கு சிறப்பினவர் தொல்லோர் உதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்
ஒருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்தும்
அரும்பெறல் மரபின் மண்டபம் —"

(சிலப். 5. 89-110.)

என இளங்கோவடிகள் கூறுதல் இங்கு அறியத் தக்கதாகும்.

கொடைத் திறன்

வேந்தர் பெருமானுகிய கரிகால் வளவனது உலையாவூக்கம், வீரருள் வீரனுகிய அம்மன்னன் குமரி முதல் இமயம்வரை படையெடுத்துச் சென்று பெற்ற வெற்றித் திறம், அவ்வரசனுல் அணிபெற அமைக்கப்பெற்ற காவிரிப்பூம் பட்டினமாகிய இந்நகரத்தின் செல்வப் பெருக்கம், தொழிற் சிறப்பு, மக்களது வாழ்க்கை முறை ஆகிய நலங்களைப் பாராட்டும் முறையில் கடியலூர் உருத்திரங்கண்ணனுர் என்ற புலவர் பெருமான் பட்டினப்பாலை என்னும் அழகிய பாடலைப்பாடி அம்மன்னனது பேரவையில் அரங்கேற்றினுர். தேனினும் இனிய செந்தமிழ்ப் பாட்டாகிய அதன் சுவை நலத்தில் திளைத்த சோழ மன்னன் தான் இமயத்திற் புலியிலச்சினை பொறித்து மீண்ட காலத்து மகதநாட்டு மன்னன்பால் திறையாகப் பெற்று வந்த பட்டிமண்டபத்துடன் பதினறு நூருயிரம் பொன்னையும் கடியலூர் உருத்திரங் கண்ணனுருக்குப் பரிசிலாகத் தந்து பாராட்டினுன் என்பது வரலாறு. இச் செய்தியினைக் கவிச் சக்கரவர்த்தியாகிய சயங்கொண்டார்,

> " தத்துநீர் வரால் குருமி வென்றதும்
> தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
> பத்தோ டாறு நூருயிரம் பெறப்
> பண்டு பட்டினப் பாலை கொண்டதும் "

(இராச, 21.)

எனக் கலிங்கத்துப் பரணியிற் குறித்துள்ளார், புலவர் பெருமானுகிய ஒட்டக்கூத்தர்,

"அன்று கவிக்கு வியந்து நயந்து தரும்பரிசிற் கொருபோர்
ஆழியில் வந்து தராதலம் நின்று புகாரி லனைத்துலகும்
சென்று கவிக்கு மகத்தது தூண் வயிரத்தினு முத்தினுமெய்
செய்ததொர்பொற்றிரு மண்டபம் நல்கிய செயதுல நாயகமே"

"நாவலனே கிடையா நவமணி மண்டபம் நின்
பாவலனே கவரப் பண்டு பணித்தவனே"

எனக் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் உள முவந்து பாராட்டியுள்ளார்.

சிதையாத பதினுறுகால் மண்டபம்

காவிரிப்பூம் பட்டினத்தைச் சிறப்பித்து உருத்திரங்கண்ணனுர் பாடிய பட்டினப்பாலை என்ற நூல் அரங்கேறிய சிறப்புடையதும் அப் பாடலின் பரிசிலாக உருத்திரங்கண்ணனுர்க்கே உரிமைசெய்யப் பெற்றதும் ஆகிய பதினுறுகால் மண்டபம், உருத்திரங்கண்ணனுரது புலமைத் திறத்தையும் அப்புலவர் பெருமானை ஆதரித்துப் போற்றிய கரிகால்வளவனது கொடைத் திறத்தையும் அறிவுறுத்தும் அறிவுச் சின்னமாகக் காவிரிப்பூம்பட்டினத்தில் நெடுங்காலம் நிலைபெற்றிருந்தது. கி. பி. பதின்மூன்ருும் நூற்ருண்டின் முற்பகுதியில் (கி. பி. 1216-1238) வாழ்ந்த முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பான், சோழநாட்டிற் படையெடுத்து வந்து சோழர்க்கு

உரிய அரண்மனை முதலியவற்றைத் தகர்த்து அழித்து வருபவன், இப்புகார் நகரத்தில் முன் கரிகால்வளவன் உருத்திரங்கண்ணனுர்க்கு உரிய பரிசிலாக விட்ட பதினாறுகால் மண்டபத்தை மட்டும் இடிக்காமல் விட்டுச் சென்றான் என்பது வரலாறு. இச்செய்தி,

"வெறியார் தளவத் தொடைச்செய மாறன் வெகுண்ட [தொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டி லரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறு மேயங்கு நின்றனவே"

என அம்மன்னன் காலத்தில் திருவெள்ளறையிற் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுப் பாடலால் இனிது விளங்கும்.*

சித்திர மண்டபம் எங்கே?

மேற்குறித்த பதினாறுகால் மண்டபத்தைச் சித்திரமண்டபம் என்றும் குறிக்கின்றார் இளங்கோ அடிகள்.

"செம்பியன் மூதூர்ச் சென்றுபுக் காங்கு
வச்சிரம் அவந்தி மகதமொடு குழீஇய
சித்திர மண்டபத் திருக்க வேந்தன்."

(சிலப் - நடுகற், 85 - 87.)

என்பது சிலப்பதிகாரம். பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னர் கொடுமையான படையெடுப்பு ஏதும் தமிழ்நாட்டில் நடந்ததாகச்

* பாண்டியர் வரலாறு. பக்கம் 116.


சரித்திரம் கூறவில்லை. ஆதலால் அம்மண்டபம் பிறரால் அழிக்கப்பட்டிருக்க முடியாதென்பது உறுதி. அவ்வாருயின் மண்டபம் என்ன ஆயிற்று? என்ற கேள்வி எழுவது இயல்பே. நாளடைவில் ஏற்பட்ட கடற் கொந்தளிப்பால் விழுங்கப்பட்டோ அல்லது மக்களது கவனக் குறைவால் பாதுகாப்பா ரின்றிச் சிதைவுற்ருே அம்மண்டபம் அழிந்திருத்தல் வேண்டும், எனக் கருதவேண்டியுள்ளது. இன்றும் புகார் நகரத்தையொட்டிய கடற்பரப்பில் நான்கு ஐந்து கல் தொலைவுவரை கட்டிடங்களும் நீண்ட சுவர்களும் தட்டுப்படுவதாலும் இப்பொழுதுள்ள ஊர்ப்பகுதியில் கட்டிடங்கள் இடிந்து தரை மட்டமாயுள்ள நிலப்பகுதிகள் பல காணப்படுவ தாலும் அவ்விடங்களை ஆராய்ந்தால் இம் மண்டபம் கடலுக்குள்ளேயோ அன்றி ஊர்ப்பகுதி யிலேயோ கண்டுபிடிக்கப்பட்டு விடலாம் என்று உறுதியாகக் கூறலாம். தமிழ் ஆட்சி நிலவிவரும் இந்நாளில் நமது அரசாங்கம் முயன்ருல்தான் இவ் வுண்மையைச் சோதித்து அறியமுடியும்.

நாளங்காடி

சோழ மன்னர்க்குரிய தலைமை நகரமாகவும் வாணிக வளர்ச்சிக்குரிய துறைமுகப் பட்டின மாகவும் அமைந்த இப்புகார் நகரம், அரசர் பேரூர் ஆதற்கு வேண்டிய அரண் முதலிய அங்கங்களைக்



கலியாணசுந்தரர் (பல்லவனிச்சரம்)



கலியாண சுந்தரர் (கலிக்காமூர்)

குறைவறப் பெற்று, மேற்பகுதி பட்டினப்பாக்கம் எனவும், கடல் வாழ்நர் ஆகிய பரதவர்களும், வெளிநாட்டு வணிகர்களும் பிறரும் கலந்து வாழ்தற்குரிய வகையில் கடற்கரையையொட்டி அமைந்த கிழக்குப் பகுதி மருவூர்ப்பாக்கம் எனவும் முற்காலத்தில் இரு பெரும் பிரிவுடையதாய் விளங்கியது. பட்டினப்பாக்கத்திற்கும் மருவூர்ப் பாக்கத்திற்கும் இடையே இருபெரு வேந்தர் முனை யிடம் போன்று அமைந்த நிலப் பரப்பு மரங்கள் செறிந்த சோலையாக விளங்கியது. இச் சோலை பட்டினப்பாக்கத்திலுள்ளவர்களும் மருவூர்ப்பாக் கத்திலுள்ளவர்களும் தமக்கு வேண்டிய உணவு முதலிய நுகர் பொருள்களைப் பகற்காலத்தே பெற்றுச் செல்வதற்குரிய கடைவீதியாக அமைந்த மையால் நாளங்காடி என்ற பெயரால் குறிக்கப் பெற்றது.

> "இருபெரு வேந்தர் முனையிடம் போல
> இருபாற் பகுதியின் இடைநிலம் ஆகிய
> கடைகால் யாத்த மிடைமரச் சோலைக்
> கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
> நடுக்கின்றி நிலைஇய நாளங்காடி -
>
> (சிலப். 5-59-63.)

என்பது சிலப்பதிகாரம்.

பட்டினப்பாக்கம்

நாளங்காடிக்கு மேற்கே சோழ மன்னர் அரசு வீற்றிருக்கும் திருநகரமாக அமைந்த பகுதி பட்டினப்பாக்கம் என்பதாகும். இதன்கண் பிறவா

யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானுக்குரிய திருக்கோயிலும் அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும், நீலமேனி நெடியோனாகிய திருமால் கோயிலும், வால்வளைமேனி வாலியோனாகிய பலதேவன் கோயிலும், மாலைவெண்குடை மன்னவன் வாழும் அரண்மனையும் அதனைச் சூழ அமைந்த இராசப் பெருந்தெருவும் அமைச்சர் படைத் தலைவர் முதலிய அரசியலதிகாரிகளின் இருப்பிடங் களும் பெருங்குடி வணிகர் வாழும் மாடவீதிகளும் உழுவித்துண்போராகிய வேளாண் மாந்தர் வாழும் பெருந்தெருக்களும் தாம் தாம் வல்ல நுண்கலைத் திறங்களால் மன்னரையும் நாட்டு மக்களையும் மகிழ்விக்கவல்ல கலைச்செல்வர் உறைவிடங்களும் அமைந்திருந்தன.

கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாடமறுகும் மறையோ ரிருக்கையும்,
வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையும்,
திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொடு
அணிவளை போழுநர் அகன்பெரு வீதியும்,
சூதர் மாகதர் வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகையர் ஆடற் கூத்தியர்
பூவிலை மடந்தையர் ஏவற் சிலதியர்
பயில்தொழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையும்,

கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தேர் ஊருநர் கடுங்கண் மறவர்
இருந்துபுறஞ் சுற்றிய பெரும்பா யிருக்கையும்
பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமும்.

(சிலப். 5 - 40 - 58.)

என்பது சிலப்பதிகாரம்.

மருவூர்ப்பாக்கம்

நாளங்காடியாகிய சோலைக்குக்கிழக்கே கடற்கரையையொட்டி யமைந்த நகர்ப்பகுதியாகிய மருவூர்ப்பாக்கத்தில் கப்பல் மூலமாக வாணிகம் புரியும் வெளிநாட்டு வணிகர்கள் தம்முள் வேறுபாடின்றித் தங்கி வாழ்தற்குரிய இருப்பிடங்களும், வண்ணம், சுண்ணம், சாந்தம், நறும்புகைக்குரிய மணப் பொருள்கள், நறுமலர் முதலியவற்றை விற்போர் விலைகூறித் திரியும் பெருந் தெருக்களும், பட்டு நூலாலும், நுண்ணிய மயிராலும், பருத்தி நூலாலும் அழகிய ஆடைகளை நெய்யவல்ல பட்டுச் சாலியர் முதலியோர் இருக்குமிடங்களும், பவளமும் ஏனைய மணிகளும் பொன்னும் ஆகிய இவற்றைப் பொன் அணிகலங்களுடன் வைத்து ஒப்பு நோக்கி மதிப்பிட வல்லார் வாழும் வளம் மலிந்த வீதிகளும், நெல்வரகு முதலிய தானியங்களை நிறையக் குவித்து வைத்துள்ள கூலக்கடைத்தெருவும், பிட்டு அப்பம் முதலிய சிற்றுண்டிகளைச் செய்து விற்போர், கள், மீன், உப்பு, நிணம் முதலியவற்றை விற்போர்,

இலையமுதிடுவோர், பஞ்சவாசம் விற்போர் முதலிய வர்களும், வெண்கலத் தொழில் செய்யும் கன்னர், மரங்கொல் தச்சர், செம்பினுற் கலங்கள்செய்வோர், இரும்பினல் தொழில் புரியும் கொல்லர், ஓவியர், சிற்பாசிரியர், பொற்கொல்லர், மணிகளிழைப்போர், தையல் வினைஞர், நெட்டி துணி முதலியவற்ருல் பறவை பூங்கொத்து முதலிய உருவங்களை அமைப்போர், குழல் முதலிய துளைக்கருவியாலும் யாழ் முதலிய நரம்புக்கருவியாலும் பண்ணும் திறமும் ஆகிய இசையினை வளர்க்கும் குழலர் பாணர் முதலியோர் ஆகிய பல்வகைத் தொழிலா ளர்கள் வாழ்தற்குரிய இடங்களும் அமைந் திருந்தன.

வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்,
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்,
வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்,
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்துகடை யறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்,

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும,
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் மைந்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி யிருக்கையும்,
கஞ்சகாரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலந் தருநரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபிற் பெரும்பா ணிருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்

(சிலப். 5 - 7 - 39.)

என்பது சிலப்பதிகாரம்.

இந்திரவிழாவெடுத்தல்

மேற்குறித்த பட்டினப்பாக்கத்திற்கும் மருவூர்ப் பாக்கத்திற்கும் இடைநிலமாயமைந்த நாளங்காடியிலே பலி பீடம் ஒன்று அமைந்திருந்தது. முசுகுந்தன் என்னும் சோழமன்னன், வானோர் தலைவனாகிய இந்திரனுக்குப் போர்த் துணையாகச் சென்று அசுரருடன் போர் செய்தபொழுது, அம் மன்னனுக்கு அசுரர்களால் நேர இருந்த பெரிய இடையூற்றைப் போக்கிய பூதமானது, இந்திரனது

579

கட்டளையால் தேவருலகத்தினின்றும் இக்காவிரிப் பூம்பட்டினத்திற்போந்து மேற்குறித்த பலிபீடத்தில் இந்நகரத்தார் தரும் பலியையேற்று அவர்களுக்கு மேன்மேலும் வெற்றியைத் தந்து விளங்கிய தெனவும், சோழன் மரபினர் முற்காலத்தில் அசுரரால் தேவர்கட்கு உண்டாகிய துன்பங்களை நீக்கி வானோர் நகராகிய அமராபதியைக் காத்த மையால் அவர்களுக்கு இந்திரனால் மகிழ்ந்தளிக்கப் பெற்ற தெய்வத்தன்மை வாய்ந்த ஐவகை மன்றங்கள் இப்புகார் நகரத்தே கொண்டுவந்து அமைக்கப்பெற்றிருந்தன எனவும், இங்ஙனம் தம் நாட்டு வேந்தராகிய சோழர்க்குப் பலவகையாலும் உதவி புரிந்த இந்திரனை நன்றியுடன் போற்றுமுக மாகப் புகார் நகர மக்களால் இந்திர விழா நெடுங் காலமாகக் கொண்டாடப் பெற்றதெனவும், அவ் விழா ஆண்டுதோறும் சித்திரை மாதத்துச் சித்திரை விண்மீன் கூடிய பூரணை நாளில் தொடங்கி இருபத்தெட்டு நாள் நிகழ்வதெனவும், சேர முனிவராகிய இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்திற் குறித்துள்ளார்.

பெயர்க் காரணம்

பரதகண்டத்தை யுள்ளடக்கிய நாவலந் தீவினைக் காக்கும் தெய்வமாய் மேருமலையின் உச்சியில் தோன்றிய சம்பு என்ற தெய்வம், முற் காலத்தில் அரக்கர்களால் இந்நிலத்தார்க்கு உள வாகும் துயரத்தினைக் கேட்டு அங்கிருந்து

தென்றிசைக்குப்போந்து இந்நகரத்தே தவஞ் செய்திருந்தமையால் இவ்வூர்க்குச் சம்பாபதி என்ற பெயர் உண்டாயிற்று எனவும், சூரிய குலத்திலே தோன்றிய காந்தன் என்ற மன்னன் தன் நாட்டிற்குத் தண்ணீர் வேண்டும் என்ற பெரு வேட்கையால் வேண்டினனெனவும், அவன் விருப்பத்தை நிறைவேற்றும் முறையில் குடமலையி லுள்ள அகத்திய முனிவர், தம் கையிலுள்ள கமண்டல நீரைக் கவிழ்த்தமையால், நேர் கிழக்கே ஓடிவந்த காவிரியாறு, இந்நகரத்தின் அருகேயுள்ள கடலொடு பொருந்தித் தோன்றியதெனவும், அந் நிலையில் இம்மூதூரில் தவஞ் செய்திருந்த சம்பாபதி யாகிய தெய்வம், காவிரியை மகிழ்ச்சியுடன் வரவேற்றுத் தன் மடிமீது அமர்த்திக்கொண்டு, “படைப்புக்காலத்தே சம்பாபதி என என் பெயரால் அமைந்த இம்மூதுரை நின் பெயரால் வழங்கச் செய்தேன் நீ நீடுவாழ்க” எனக் காவிரியை வாழ்த்தியதெனவும் மணிமேகலைப் பதிகம் கூறும். இக்குறிப்பினை நோக்குங்கால் காவிரியாறு இந் நகரத்தின் நடுவே சென்று கடலொடு கலப்ப தென்பதும் அதன் தெற்கும் வடக்கும் ஆக அமைந்த நிலப்பகுதியே காவிரிப்பூம்பட்டினம் என முற்காலத்தில் வழங்கப்பெற்றதென்பதும் நன்கு புலனாதல் காணலாம்.


புகாரின் நிலப்பரப்பு

சங்க காலத்தில் சோழநாட்டின் உள்நாடாகிய புகார் நாடு என்ற நாட்டிற்குத் தலையூராக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். இவ்வூர் 1800 ஆண்டுகளுக்கு முன் நான்கு காவதம் (சுமார் முப்பது மைல்) பரப்புடைய பேரூராய் விளங்கிய தெனச் சிலப்பதிகாரம் கூறும். இப்பொழுது கருவேந்தநாதபுரம், கடாரங்கொண்டான் என வழங்கும் ஊர்கள் இந்நகரத்தின் மேற்புறவெல்லை யாகவும், திருக்கடவூர் தெற்கெல்லையாகவும் கலிக் காமூர் (அன்னப்பன்பேட்டை) வடக்கெல்லை யாகவும் கடல் கிழக்கெல்லையாகவும் அமைய, இந் நாற்பேரெல்லைக்குட்பட்ட சிற்றூர்கள் அனைத் தையும் தன் அங்கமாகக்கொண்ட நிலப்பகுதியே முற்காலத்தில் காவிரிப்பூம்பட்டினமென ஒரு பெருநகராக விளங்கியது.

புகார்நகரத்துக் குடிகள்

இப்பெருநகரத்தில் முற்காலத்தில் அறுபதி னாயிரங் குடிகள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தார் கள் எனத் தெரிகிறது. சிலப்பதிகார ஏடொன்றில் மனையறம் படுத்தகாதைத் தொடக்கத்தில் "உரை சால் சிறப்பின் அரசுவிழை திருவின்" என்ற அடிக்கு முன்னர்,

"திருவின் செல்வியொடு பெருநில மடந்தையை
ஒருதனி யாண்ட செருவடு திண்டோள்
கரிகாற் பெரும்பெயர்த் திருமா வளவனைப்



இச்சிற்றூர்கள் அனைத்தையும் தன்னகத்தேகொண்ட நாடுதான் புகார்நாடு.

பாலை பாடிய பரிசிலன் றெடுத்த
மாலைத் தாகிய வளங்கெழு செல்வத்து
ஆறைந் திரட்டியும் ஆயிரங் குடிகளும்
வீறுசால் ஞாலத்து வியலணி யாகி
உயர்ந்தோ ருலகிற், பயந்தரு தானமும்
இல்லது மிரப்பு நல்லோர் குழுவும்
தெய்வத் தானமும் திருந்திய பூமியும்
ஐயர் உறையுளும் அறவோர் பள்ளியும்
விண்ணவர் உலகின் நண்ணிடு நகரமொடு
எண்ணுவரம் பறியா இசையொடு சிறந்த"

என வரும் அடிகள் காணப்படுதலைச் சிலப்பதிகாரப் பதிப்பாசிரியராகிய பெரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதையரவர்கள் அடிக் குறிப்பிற் குறித்துள்ளார்கள். காவிரிப்பூம்பட்டினத்தின் பண்டைக் கால அமைப்பினை விளக்கும் இத்தொடர்களை இளங்கோவடிகள் வாக்கெனத் திட்டமாகக் கொள்ள முடியவில்லை. எனினும், இவற்றிற்குறிக்கப் பட்டுள்ள செய்திகள் இப்புகார் நகரத்தின் பழைய அமைப்பினை உள்ளவாறு விளக்கும் முறையில் அமைந்திருத்தல் அறிந்து மகிழத்தக்கதாகும். அக் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் அறுபதி னுயிரம் குடும்பங்கள் வாழ்ந்தன என்ருல் அந் நகரத்தின் மக்கள்தொகை ஏறக்குறைய முந்நூரு யிரத்திற்கு மேலிருக்குமெனக்கருதுதல் பொருந்தும். சுருங்கக் கூறுவோமானுல், இக்காலத்தில் நம் தமிழகத்தின் தலைநகராகத் திகழும் சென்னை நகரத்தினை யொத்த பரப்பும் செல்வ வளமும்

மக்கட் பெருக்கமும் வாய்ந்த மூதூர் அக்காலத்தில் சோழர் தலைநகராக விளங்கிய நம் காவிரிப்பூம் பட்டினம் எனக் கூறுதல் பொருந்தும்.

கடல்கோளால் சிதைந்த மருவூர்ப்பாக்கம்

இவ்வாறு கடைச்சங்க காலத்தில் நாற்காதப் பரப்புடையதாய் விளங்கிய இப்புகார் நகரம் கிள்ளி வளவன் காலத்தில் இந்திர விழாக் கொண்டாட மறந்தமையால் கடல் கோளாற் சிதைவுற்ற தென மணிமேகலை கூறுகிறது.* இக்கடல் கோளால் இந்நகரம் முழுவதும் அழியவில்லை யென்பதும் இதன் கிழக்குப்பகுதியாகவிருந்த மருவூர்ப்பாக்கமே கடலாற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமென்பதும் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பழந்தமிழிலக்கியங்களையும் இந்நகரப் பகுதியில் அமைந்த ஊர்ப் பெயர்களையும் பிற வரலாற்றுக் குறிப்புக்களையும் ஒப்பு நோக்குங் கால் நன்கு விளங்கும்.

"செங்நெலஞ் செறுவின் அன்னந்துஞ்சும்
பூக்கெழுபடப்பைச் சாய்க்காட்டன்ன"

— அகம், 73

எனவும்,

"நெடுங்கதிர்க் கழனித் தண்சாய்க்கானம்"

— அகம், 220

எனவும் சங்கச் செய்யுட்களில் குறிக்கப்பெற்ற பழம்பதியாகிய சாய்க்காடு என்பது இப்புகார்

* மணிமேகலை. 25. 176 - 200.

நகர எல்லேயுள் அமைந்ததேயாகும். இவ்வூர் புகார் நகரத்தின் ஒரு பகுதியே என்பதனே,

"தண்புகார்ச் சாய்க்காட் டெந்தலேவன்"

எனவும்,

'காவிரிப்பூம்பட்டினத்துச் சாய்க்காட்டெம் பரமேட்டி"

எனவும் வரும் திருஞானசம்பந்தர் திருப்பதிகத் தொடர்களால் நன்குணரலாம். சாய்க்காட்டிலுள்ள திருக்கோயிலின் தெற்கே கால் மைல் தூரத்தில் புகார் நகரத் தெய்வமாகிய சம்பாபதி கோயில் அமைந்திருத்தலே இன்றும் காணலாம். சம்பாபதி கோயிலுக்குக் கிழக்கே காவிரியின் கரையோரம் அமைந்த பூவனம் மணிமேகலேயிற் குறிக்கப்பட்ட பழையஉவவனமாகும். சாய்க்காட்டினே யடுத்து இக்காலத்தில் வெள்ளேயனிருப்பு என வழங்கும் இடம் சிலப்பதிகாரத்திற் குறிக்கப்பட்ட வால்வளே மேனி வாலியோனுகிய பலதேவன்கோயில் இருந்த இடமாகும். இதனேயொட்டிப் பல்லவனீச்சரத் திற்குக் கிழக்கே கால்மைல் அளவிலுள்ள திருமால் கோயில் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட மணி வண்ணன் கோட்டமாகும். காவிரியின் தென் கரையில் திருவலம்புரத்திற்குக் கிழக்கேயுள்ள வாணகிரி என்ற ஊர், பத்துப்பாட்டுள் ஒன்ருகிய பட்டினப்பாலேயில் "இருகாமத்திணேயேரி" என்ற தொடர்க்கமைந்த உரைப்பகுதியில் நச்சினுர்க் கினியர் பிற வுரையாசிரியர்கள் கூறும் உரை விகற்ப மாகக் குறித்த வளகாமரேரி வணிகாமரேரி என்னும் இரண்டனுள் வணிகாமரேரியாக இருத்தல்கூடும்.

அவ்வூரின் மேற்கிலும், திருவலம்புரத்தின் தெற்கிலும் அமைந்த சங்கந்தங்குளம் என்ற இடம் மேற்குறித்த உரைப்பகுதியில் நச்சினர்க்கினியர் மற்ருெரு சாரார் கூற்ருகக் குறித்த சங்கிராமகாமம் வணிக்கிராமகாமம் என்னும் இரண்டனுள் சங்கிராமகாமம் என்ற ஏரியாக இருத்தல் கூடும். திருவலம்புரத்தின் வடக்கே காவிரியின் வடகரையில் உள்ள மணிக்கிராமம் என்ற ஊர் இப்புகார் நகரத்திலிருந்து வெளிநாடுகளிற் சென்று வணிகம் புரிந்த வணிகர் குழுவினர் வாழ்ந்த இடமாகும்.

கடலுள் மூழ்கிய கோயில்

காவிரி கடலிற் கலக்குமிடத்தில் அமைந்த கடற்பகுதியில் இங்கு வாழும் பரதவர்கள் "கப்பகரப்பு" என ஒரு இடத்தைக் குறிக்கின்றனர். இப்பகுதியில் ஒரு காலத்தில் துறைமுகம் அமைந்திருந்ததாகவும் பெரும் புயலடித்தபொழுது அப்புயலிற் சிக்கிய கப்பலொன்று அவ்விடத்தில் அமிழ்ந்துவிட்டதாகவும் அவர்கள் கூறுகின்றனர். "நெய்தலங்கானல் நெடியோய்" என இளஞ்சேட்சென்னிக்குரியதாகப் புறநானூற்றிற் குறிக்கப்பட்ட ஊர், இப்பொழுது காவிரிப்பூம்பட்டினத்தின் வடக்கே கடற்கரையை யடுத்து நெய்தவாசல் என வழங்குகிறது. "கைதைவேலி நெய்தலங்கானல்" என இளங்கோவடிகளாற் குறிக்கப்பெற்ற இப்பகுதி, அடிகள் காலத்தில் சோமகுண்டம், சூரியகுண்டம்

ஆகிய தீர்த்தங்களையும், காமவேள்கோட்டத்தையும் தன்பாற்கொண்டு விளங்கியது. இந் நெய்தலங்கானலை உள்ளிட்ட மருவூர்ப்பாக்கமாகிய கிழக்குப்பகுதி, கிள்ளிவளவன் காலத்தில் கடல் கோளால் அழிந்து மறைந்தமையால் அக்கடற் கரையிலுள்ள குறைப்பகுதியே இன்று நெய்தவாசல் எனப் பெயரளவில் ஓருராக வழங்குகிறது. இப்பொழுது நெய்தவாசலுக்கும் காவிரிப்பூம் பட்டினத்திற்கும் நடுவே கீழ்த்திசையில் ஏழு மைல் அளவில் அமைந்த கடற்பகுதியை அங்கு வாழும் பரதவர்கள் "கரையப்பார்" எனக் கூறு கின்றனர். இப்பகுதியில்தான் முற்காலத்தில் கடல் கொண்ட புகார்நகரத்தின் கிழக்குப் பகுதியிலிருந்த கட்டிடங்களும் காமவேள்கோட்டம் முதலிய கோயில்களும் இருந்தன என்பதற்குரிய அடையாளங்கள் இன்றும் காணப்படுகின்றன. இக்கடற் கரைப்பகுதியிற் படகிற்சென்று மீன்பிடிக்கும்போது முற்காலத்திலிருந்த கோயில் முதலிய கட்டிடப் பகுதிகளுட் சில இன்னும் தட்டுப்படுகின்றன என இங்குள்ள பரதவர்கள் தெளிவாகக் கூறுகின்றார் கள். கடலிடையேயுள்ள இப்பகுதியில் சிலவாண்டு களுக்குமுன் பரதவர்கள் மீன் பிடித்தபோது, வெண்கலத்தாலமைந்த கலியாணசுந்தரர் திரு வுருவமும் கருங்கல்லிற் செதுக்கப்பட்ட அழகம்மை யின் திருவுருவமும் மீன் பிடிக்கும் வலையிற் சிக்கிய நிலையில் அத்திருவுருவங்கள் அவர்களால் மூழ்கி யெடுக்கப்பெற்றன. அத்திருவுருவங்கள்

அன்னப்பன்பேட்டையென வழங்கும் கலிக்கா மூர்த் திருக் கோயிலில் வைக்கப்பெற்றுள்ளமை காணலாம். திருச்சாய்க்காட்டுத் திருக்கோயிலி லுள்ள வில்லேந்திய முருகன் திருவுருவமும் இவ்வாறே சில ஆண்டுகளுக்கு முன் புகார்த் துறைமுகத்தே கடலிலிருந்து கிடைத்ததேயாகும். நிலமகழ்ந்தபோது அதனிடைக் கிடைக்கப்பெற்ற திருவுருவங்களும் சிலவுண்டு. திருவெண்காடு என்ற ஊரின் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட 5 திருவுருவங்கள் இப்பொழுது தஞ்சைக் கலைக் கூடத்திற் பார்ப்பவர் மகிழ வைக்கப்பெற்றிருப் பதைக் காணலாம். உறைக் கிணறுகளும், பெரும் பெரும் கிணறுகளும், நிலத்தினின்றும் தோண்டி எடுக்கப்பெறுவன கணக்கிலடங்கா. முதுமக்கள் தாழிகள் பலவும் இங்கு கிடைக்கின்றன. பழைய பொற்காசுகளும் கிடைக்கின்றன.

ஆராய்ச்சிக்குரிய பகுதி

கரையப்பார் என்ற இவ்விடத்தில் மீன் பிடிக்கும் உரிமை மேற்குறித்த கலிக்காமூர்த் திருக்கோயிலுக்குரியதாகும். இக்கடற் பகுதி பழைய கட்டிடங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டதாய்ப் பாசி படிந்திருத்தலால் இங்கே மீன்கள் நிறையத் தங்குகின்றன எனப் பரதவர் கூறுகின்றனர். கரையிலிருந்து ஏழுமைல் அளவில் இக்கடற் பகுதியில் கட்டுமரத்திற் சென்று பார்த்தால். பழைய கோயிற் கோபுரத்தின் உச்சி

நான்குபாகஅளவில்தட்டுப்படுவதாகவும்பதினேழு பாக அளவில் அடித்தளம் தட்டுப்படுவதாகவும் இவ்விடத்தை யடுத்துச் சுமார் நூறடி அளவில் கோயிலின் சுற்றளவு தெரிவதாகவும் இங்கே மீன் பிடிக்கும் பரதவர்கள் அடையாளத்துடன் காட்டு கின்றனர். அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய இடத்திற் சென்று ஆராய்ந்தால் கடல்கொண்ட காவிரிப்பூம்பட்டினத்தில் முற்காலத்திலிருந்த கட்டிடங்களில் ஒருசிலவற்றையேனும் நாம் இக் காலத்தில் கண்டு மகிழ முடியும். சென்னை யரசும் இந்திய அரசும் புதைபொருளாராய்ச்சித்துறையின் வழியாக இதற்கான ஆராய்ச்சித் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுதல் வேண்டும்.

இணைந்த ஏரிகள்

இம்மையிலும் மறுமையிலும் உண்டாகிய காம இன்பத்தினைக் கொடுத்தற்குரிய இணைந்த ஏரிகளாகப் பட்டினப்பாலையிற் குறிக்கப்பட்ட இரு குளங்களும் கடலொடு காவிரி கலக்கும் இட மாகிய சங்கமுகத்துறையில் நெய்தலங்கானல் என்ற சோலையில் காமவேள் கோயிலுடன் அமைந்தனவாக இளங்கோவடிகளாற் குறிக்கப் பட்ட சோமகுண்டம் சூரியகுண்டம் என்னும் பெயருடைய இரண்டு தீர்த்தங்களே என்பது நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் ஆகிய பழைய உரையாசிரியர்களின் துணிபாகும். நீராடினார்க்கு இம்மை மறுமை இன்பங்களை

அளிக்கும் பெருமை வாய்ந்தனவாகிய இவ்விரு குளங்களும் அடுத்துள்ள காமவேள் கோட்டத்துடன் கடலால் கொள்ளப்பட்டு மறையவே, அக்காலத்துள்ள புகார் நகர மக்கள் இவற்றை நினைவு கூர்ந்து நீராடிப் பயன் பெறுங் கருத்துடன் இம்மை மறுமைக்குரிய இவ்விரு குளங்களுடன் அம்மையாகிய வீடு பேற்றினை யளிக்கவல்ல அக்கினி தீர்த்தம் என்ற மற்றொரு தீர்த்தத்தையும் சேர்த்துத் திருவெண்காட்டுத் திருக்கோயிலில் முக்குளங்களாக அமைத்தனர். இதனால் இவ்வுலக மக்கள் மேற்குறித்த மூன்று குளங்களிலும் நீராடி இறைவனை வழிபட்டு இம்மை மறுமையாகிய இருமையின்பங்களுடன் ஈறிலாவின்பமாகிய வீடு பேற்றினையும் ஒருங்கு பெறுதற்குரிய நல்வாய்ப்பினையும் வழங்கியுள்ளார்கள் எனக் கருதவேண்டியுள்ளது.

"கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்
மடலவிழ் நெய்தலங் கானல் தடமுள
சோமகுண்டஞ் சூரியகுண்டத் துறை மூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப் பிறப்பர்"

(சிலப். - கனாத்திரம் - 57 - 62)

எனத் தேவந்தி கண்ணகிக்குக் கூறுவதாக அமைந்த இவ்வடிகளில், இளங்கோவடிகள் குறித்த இவ்விரு தீர்த்தங்களின் சிறப்பையும் நன்குணரலாம். கடலொடு காவிரி சென்று சேரும்



ஒடேந்து செல்வர் (திருவலம்புரம்)



அகோரமூர்த்தி (திருவெண்காடு)

இடத்திலமைந்த இத்தீர்த்தங்களை நன்னெடும் பெருந் தீர்த்தம் எனப் போற்றுவர் சேக்கிழார்.* இவை கடலாற்கொள்ளப்பட்ட நிலையில் திருவெண் காட்டிலுள்ள முக்குளங்களில் மூழ்கி இறைவனை வழிபட்டோர் அடையும் பயன்களை உலக மக்களுக்கு அறிவுறுத்துவன:

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்த்
தோய்வினை யாரவர் தம்மைத் தோயாவாந்தீவினையே"

எனவும்,

"தண்முத்தரும்பத் தடமூன்றுடையான் தனையுள்கிக்
கண்முத்தரும்பக் கழற்சேவடி கைதொழுவார்கள்
உண்முத்தரும்ப உவகைதருவான் ஊர்போலும்
வெண்முத்தரும்பிப் புனல்வந்தலைக்கும் வெண்காடே"

எனவும் கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாடல்கள். இளங்கோவடிகளும் திருஞானசம்பந்தரும் குறித்த

---

*சென்னிவெண்குடை நீடநபாயன்
திருக்குலம் புகழ் பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு
வயல் வளந்தர இயல்பினிலளித்துப்
பொன்னி நன்னதி மிக்க நீர்பாய்ந்து
புணரிதன்னையும் புனிதமாக்குவதோர்
நன்னெடும் பெருந்தீர்த்தமுன்னுடைய
நலஞ் சிறந்தது வளம் புகார் நகரம்.
(பெரிய-இயற்பகை-1)

இத் தீர்த்தங்களின் சிறப்பை ஒப்புநோக்கிச் சிந்திப்போமானல் முற்காலத்தில் கடலுள் மறைந்த சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய இரு தீர்த்தங்களுக்கும் இக்காலத்தில் திருவெண் காட்டுத் திருக்கோயிலிலுள்ள சோமதீர்த்தம், சூரிய தீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்ற முக்குளங்கட்கும் உள்ள ஒற்றுமைத் திறம் நன்கு விளங்கும்.

புகாரில் அமைந்த கோயில்கள்

"அமரர் தருக்கோட்டம், வெள்யானைக்கோட்டம்.
புகர்வெள்ளை நாகர்தம்கோட்டம், பகல்வாயில்
உச்சிக்கிழான்கோட்டம், ஊர்க்கோட்டம், வேற்கோட்டம்
வச்சிரக்கோட்டம், புறம்பணையான் வாழ்கோட்டம்,
நிக்கந்தக்கோட்டம், நிலாக்கோட்டம்"

(சிலப். - கனாத்திறம் - 9-13)

எனவும், "மணிவண்ணன் கோட்டம்" "இந்திர விகாரம்" (சிலப். - நாடுகாண்) எனவும் குறிக்கப் பட்ட இக்கோயில்கள் யாவும் காவிரிப்பூம் பட்டினத்தே அமைந்திருந்தன என இளங்கோ வடிகள் குறிப்பிடுவர். இவற்றுள் "அமரர்தருக் கோட்டம்" என்பது தேவருலகத்திலுள்ள கற்பகத் தருவை வழிபடும் நிலையில் அமைந்த கோயிலாகும். இதனைச் "சாந்திகரைக்கோட்டம் எனினும் ஆம்" என அரும்பதவுரையாசிரியர் குறிப்பிடுதலால், இக் கோயில் கடற்கரை யருகே அமைந்திருந்ததெனத் தெரிகிறது. வெள்ளைநாகர் என்பது பலதேவர்க் குரிய பெயராகும். பலதேவர்க்குரிய கோயில்

இருந்த இடம் இக்காலத்தில் "வெள்ளையனிருப்பு" என வழங்குகிறது.

பகல்வாயில்-பகல் (கதிரவன்) தோன்றுகின்ற வாயில்; அதாவது கீழ்த்திசை. உச்சிக்கிழான்-சூரியன். இந்நாட்டை ஆட்சிபுரிந்த சோழ மன்னர்க்குக் குல முதல்வனாகிய சூரியனை வழிபடுதற்கமைந்த திருக்கோயில்

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு"

எனத் திருமுருகாற்றுப்படையில் அமைந்த தெய்வக் காட்சியைப் புலப்படுத்தும் முறையில் சோழர்தலைநகராகிய இக்காவிரிப்பூம்பட்டினத்தின் கீழ்த்திசையில் கடலோரத்திலே நிலைபெற்றிருந்த தென்பது அடியார்க்கு நல்லார் உரையால் நன்கு விளங்கும்.

ஊர்க்கோட்டம் என்பது இறைவன் எழுந்தருளிய "ஸ்ரீகைலாயம் நிற்கும் கோயில்" என அரும்பதவுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் தெளிவாகக் குறித்துள்ளார்கள். எனவே பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானுக்குரிய திருக்கோயில் காவிரிப்பூம்பட்டினமாகிய இம் மூதூரில் நடுநாயகமாக அமைந்திருந்ததென்பது நன்கு புலனாதல் காணலாம்.

கடல் கொண்டெஞ்சிய நிலையில் இப்போதுள்ள காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர்க்குச்

சிறப்புரிமையுடையதாக விளங்கும் நிலப்பகுதியில் நடுநாயகமாகத் திகழ்வது சிவபெருமான் வீற்றிருந்தருளும் பல்லவனீச்சரம் என்ற திருக்கோயிலேயாகும். வேற்கோட்டம் என்பது முருகப்பெருமான் எழுந்தருளிய திருக்கோயில். இது முற்காலத்தில் தனிக் கோயிலாக இருந்து மறைந்த நிலையில் அறுமுகப்பெருமான் வழிபாடு சிவபெருமான் திருக்கோயில்களில் இடம் பெறுவதாயிற்று.

வச்சிரக்கோட்டம் என்பது, இந்திரனது படைக்கலமாகிய வச்சிராயுதத்தை வைத்து வழிபடும் கோயிலாகும். இக்கோயிலில் வெற்றி முரசம் ஒன்று வைக்கப்பெற்றிருந்ததென்றும், இந்திரவிழாச் செய்யக் கருதிய இவ்வூர் மக்கள் நாளங்காடியிலும் ஐவகை மன்றங்களிலும் பலியிட்டு வச்சிராயுதம் நிற்கும் கோயிலாகிய இவ்விடத்திலுள்ள முரசினைப் பட்டத்துயானையின் மேலேற்றிக்கொண்டு ஐராவதமாகிய வெள்ளை யானையின் கோயிலிற் சென்று இந்திரனுக்குச் செய்யவிருக்கும் விழாவின் தொடக்கத்தையும் முடிவையும் அறிவித்துக் கற்பகத்தரு நிற்கும் கோயிலின் முன்னர் அட்டமங்கலத்தொடு ஐராவதம் எழுதிய கொடியை யேற்றுவித்து ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் சூழ்ந்துவரச் சங்கமத்துறையிற் குளிர்ந்த தீர்த்தநீரை ஆயிரத்தெட்டு அரசர்களது முடிபொறிக்கப்பட்ட பொற் குடத்திற் கொணர்ந்து விண்ணவர் தலைவனாகிய இந்திரனை நீராட்டி விழாக் கொண்டாடினரென்றும்

சிலப்பதிகாரம் கூறும். தங்கள் நாட்டை ஆட்சி புரியும் சோழ மன்னர் மேன்மேலும் வெற்றியுடன் விளங்குதல் வேண்டும் என்ற உயர்ந்த குறிக் கோளுடன் இப்புகார் நகரமக்களால் அக்காலத்திற் கொண்டாடப்பெற்ற இந்திர விழா, ஒவ்வோ ராண்டிலும் சித்திரைத்திங்களில் சித்திரை விண்மீனும் பூரணையும்கூடிய நாளிற் கொடியேற்றி இருபத்தெட்டுநாள் விழா நடந்து கொடி யிறக்கி வைகாசி மாதம் அனுட நாளில் கடலாடலாகிய தீர்த்தத்துடன் நிறைவுபெறும் என்பதும், ஆடல் பாடல் ஆகிய பல்வகைக் கலைத் திறங்களுடன் ஆண்டுதோறும் இப்புகார் நகரத்தில் நிகழும் இந்திரவிழாவைக் கண்டு மகிழ நாவலந்தீவிலுள் ளார் பலரும் வருவார் என்பதும் சிலப்பதிகாரத் திலும் அதன் உரையிலும் விரிவாகக் கூறப் பட்டிருத்தல் காணலாம்.

புறம்பணையான் என்பது மாசாத்தனுராகிய ஐயனுர்க்குரிய பெயராகும். ஒவ்வொரு நகரத்தின் எல்லையிலும் இருந்து அவ்வந்நகரங்களைக் காவல் புரியும் எல்லைத் தெய்வங்களுள் ஐயனுரும் ஒருவர். அவர்க்குரிய திருக்கோயில் காவிரிப்பூம்பட்டின மாகிய இந்த நகரத்தின் புற எல்லையில் அமைந் திருந்ததாகத் தெரிகிறது. இந்த ஐயனுரே கண்ணகியின் தோழியாகிய தேவந்தியை மணந்து தன் மூவா இளநலங்காட்டி மறைந்தார் என இளங்கோவடிகள் கூறுவர். நிக்கந்தக்கோட்டம்

என்றது நிக்கந்தத் தேவரான அருகக் கடவுள் எழுந்தருளிய கோயிலாகும். உலக உயிர்களுக்கு வெப்பமும் தட்பமுமாகிய ஒளி வழங்கி உய்விக்கும் ஆற்றல் வாய்ந்த சூரியனையும், சந்திரனையும் தெய்வமாக வைத்துப் போற்றும்முறை நம் நாட்டில் தொன்றுதொட்டு வரும் மரபென்பது, "திங்களைப் போற்றுதும்" எனவும் "ஞாயிறு போற்றுதும்" எனவும் இளங்கோவடிகள் தாம் இயற்றிய முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகார நூன்முகத்தே பரவிப் போற்றுதலால் நன்கு புலனாகும்.

கோவலன் சென்ற வழி

கடற்கரைச் சோலையிலே தன் காதற்கிழத்தி மாதவி பாடிய கானல்வரிப் பாடலை ஊழ்வினை வயத்தால் மாறுபட்ட பொருளுடையதாக எண்ணி அவளை வெறுத்துப் பிரிந்த கோவலன், தன் வாழ்க்கைத் துணைவியாகிய கண்ணகியை அடைந்து தன் துயர் நிலையைப் புலப்படுத்திய பொழுது, கற்புடைச் செல்வியாகிய கண்ணகி, "என் காற்சிலம்புள்ளன அவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள்" என அவனிடம் கொடுக்க, அதனைப் பெற்ற கோவலன், இச்சிலம்பினை முதற் பொருளாகக்கொண்டு வேற்று நாட்டிற் சென்று பெரும் பொருள் ஈட்டுதல் வேண்டும் என்ற ஊக்கத்துடன் கண்ணகியையும் உடனழைத்துக் கொண்டு தன் சுற்றத்தாரெவருக்கும் தெரியாத

நிலையில் மதுரைக்குச் செல்ல வைகறைப் பொழுதிலேயே தன் வீட்டைவிட்டுப் புறப் பட்டான்; அங்ஙனம் புறப்பட்டவன், அரவணைமீது அறிதுயில்கொள்ளும் மணிவண்ணனாகிய திருமால் எழுந்தருளிய திருக்கோயிலை வலஞ்செய்து, அதனை யடுத்து ஏழரங்குகளாக இந்திரனால் நிருமிக்கப் பெற்ற பௌத்தப் பள்ளியாகிய இந்திர விகாரங்கள் ஏழினையும் முறையே கண்டான்; புலவூண் துறந்து அறநூல் முதலியவற்றை நன்குணர்ந்து ஐம்புல னடக்கிய அறவோர் குழுமிய ஐவகையாக அமைந்த அருகத்தானமாகிய ஐஞ்சந்தியின் நடுவேயமைந்த மன்றத்திலே அசோக மர நிழலில் நல்லறங்களைக் கூறுதற்கெனச் சமணரில் இல்லறத் தாராகிய சாவகர்களால் அமைக்கப்பட்டிருந்த ஒளி வளர் கற்பீடத்தைத் தொழுது வலங் கொண்டான்; ஊர் வாயிலைக் கடந்து, வேந்தனும், அவன் சுற்றத்தாரும் வேனிற்காலத்தில் தங்கி யிருத்தற்குரிய இளமரச் சோலையாகிய இலவந்தி கையைச் சூழ்ந்த மதிலோரமாக அமைந்த வழியே சென்றான்; காவிரித்துறையில் நீராடச் செல்வோர் தடையின்றி நேரே செல்லுதற்கென அமைந்த திருமஞ்சனப் பெருவழியைக் கடந்து, மேற்றிசை நோக்கித் திரும்பிக் காவிரியின் வடகரையிலமைந்த பொழில் வழியாக நடந்தான்; இவ்வாறு ஒரு காத தூரம் சென்ற பிறகு சமண்சமயத் தவமுது மகளாகிய கவுந்தியடிகள் தங்கியிருந்த தவப் பள்ளியை அடைந்தான் என இளங்கோவடிகள்

தெளிவாகக் குறித்துள்ளார். இக்குறிப்புக்களைக் கூர்ந்து நோக்கினுல் சோழ நாட்டின் துறைமுகப் பட்டினமாகிய இந்நகரத்திலிருந்து உள்நாட்டிற்குச் செல்லும் வழியில் எதிர்ப்படும் இந்நகரத்தின் தோற்றம் நன்கு புலனுதல் காணலாம்.

ஐந்து வகை வனங்கள்

இந்நகரத்தையொட்டி முற்கூறிய இலவந்திகைச்சோலை, உய்யானம், கவேரவனம், சம்பாதிவனம், உவவனம் என்னும் ஐந்து வனங்கள் இருந்தன. அவற்றுள் இலவந்திகை என்பது, வேந்தன் தன் பரிவாரங்களுடன் வேனிற் காலத்தில் தங்கியிருத்தற்கேற்றவண்ணம் குளிர்ந்த நிழலும் நீர் நிலையும் கொண்டு சுற்றிலும் மதிலாற் சூழப்பெற்றுள்ள காவற்சோலையாகும். உய்யானம் என்பது தெய்வ வழிபாட்டிற்குரிய நறுமலர்களைத் தரும் நந்தவனமாகும். கவேரவனம் என்பது, காவிரியின் தந்தையாகிய கவேரன் தவம் புரிந்த இடமாகும். சம்பாதிவனம் என்பது, சூரிய கிரணத்தாற் சிறையிழந்த கழுகரசனுகிய சம்பாதி தவம்புரிந்த வனமாகும். உவவனம் என்பது, புத்த தேவரது பாதபீடிகையைத் தன்பாற்கொண்ட பளிங்கு மண்டபத்தை அகத்தேகொண்டு பல வகை நறுமலர்களைத் தரும் மரங்களுடன் திகழும் மலர் வனமாகும். இவ்வனத்தின் மேற்குத்திசையில் அமைந்த சிறிய வாயில் வழியே சென்ருல் இப் புகார் நகரத்தின் ஈமப்புறங்காடாகிய சக்கரவாளக்

கோட்டத்தை யடையலாமென்றும், மேற்குறித்த உவவனத்திற்கும் சக்கரவாளக்கோட்டத்திற்கும் இடையே "உலக அறவி" என்னும் பொது அம்பலம் அமைந்திருந்ததென்றும், அதன்கண் இந்நகரத் தெய்வமாகிய சம்பாபதி கோயிலும் இவ் வம்பலத்திலுள்ள தூணொன்றிற் கந்திற்பாவை என்ற தெய்வத்தின் உருவமும் இருந்தன என்றும் சீத்தலைச்சாத்தனார் 'மணிமேகலை'யிற் குறித்துள்ளார்.

இக்காலத்தில் வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் புள்ளிருக்குவேளூரில் முற்காலத்தில் சம்பாதி, சடாயு என்னும் கழுகரசர் இருவர் சிவபெருமானை வழிபட்டிருந்தனர். இவ்விருவருள் சம்பாதி என்பார் நாள்தோறும் இத்தலத்துக்கு ஒரு யோசனை (சுமார் ஒன்பது மைல்) அளவு சென்று நறுமலர்களைப் பறித்துவந்து இறைவனை அருச்சித்துப் போற்றினர் என்பது புராண வரலாறு. இச்செய்தியினைக் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த திருஞானசம்பந்தப் பிள்ளையார்

"கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடா என்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே"

எனவும்,

"யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளும் [ஒழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே"

எனவும் வரும் திருப்பாடல்களிற் குறித்துப் போற்றி யுள்ளார்கள். நான்கு குரோசம் கொண்ட தூரம் ஒரு யோசனை என்றும், ஒரு குரோசம் என்பது இரண்டேகால் மைல் என்றும் கூறுவர். எனவே, சுமார் ஒன்பது மைல் தூரம் ஒரு யோசனையெனக் கொள்ளலாம். இக்கணக்கினைக்கொண்டு சிந்தித் தால் சம்பாதி என்ற பெரியார் புள்ளிருக்கு வேளூர்ப் பெருமானைப் பூசித்தற்பொருட்டு நாள்தோறும் நறு மலர் பறித்துவந்த நந்தவனம் இப்புகார் நகர எல்லையை அடுத்திருந்ததென்பது நன்கு விளங்கும். அது இப்பொழுது பெருந்தோட்டம் என வழங்கும் ஊரினைக் குறிக்கலாம். திருஞானசம்பந்தப் பிள்ளையார் பதிகத்திற் குறிக்கப்படும் இக்குறிப் புக்குப் பொருந்த "சம்பாதியிருந்த சம்பாதி வனம்" இப்புகார் நகரத்தில் இருந்ததென மணிமேகலை கூறும் குறிப்பு அமைந்திருத்தல் காணலாம்.

ஐந்துவகை மன்றங்கள்

முற்காலத்தில் அசுரர்களால் தேவர்களுக்கு உண்டாகிய துன்பங்களைப் போக்கி வானோர் தலைவனாகிய இந்திரனுக்குச் சோழ மன்னன் ஒருவன் உதவி புரிந்தமையால் மகிழ்ச்சியடைந்த இந்திரன், அம்மன்னனுக்குத் தெய்வத்தன்மை வாய்ந்த ஐவகை மன்றங்களை உவந்து அளித்தான் என்பதும், அவ்வாறு அளிக்கப்பட்ட சிறப்புடைய மன்றங்கள் ஐந்தும் சோழர் தலைநகராகிய இப் புகார் நகரத்தே நிலைபெற்றிருந்தன என்பதும்

முன்னர்க் கூறப்பட்டன. அம்மன்றங்களுள் வெள்ளிடை மன்றம் என்பது, புகார் நகரத் துறைமுகத்தை யொட்டிய பெருவெளியில் அமைந் திருந்தது. கடல்முற்றமாகிய இவ்விடத்திலே வெளிநாடுகளிலிருந்து கடல் வழியாக வந்து இறங்கிய பல பண்டங்களும் இந்நாட்டி லிருந்து புறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தற்கெனக் கொணரப்பட்ட பல பண்டங்களும் தனித்தனி மூடைகளாகக் கட்டப்பட்டு அவற்றின் அளவும் நிறையும் எண்ணும் எழுதப்பெற்று அரசனது புலி யிலச்சினை பொறிக்கப்பெற்றனவாய்க் குவிந்து கிடந்தன எனவும், கதவும் காவலும் இன்றி வெறு வெளியிற் குவித்து வைக்கப்பெற்றுள்ள பண்டங்களை இவ்விடத்தின் உண்மை நிலை யுணராது எவரேனும் களவினாற் கவர்ந்து செல்ல முயன்றால் அப்பண்டப் பொதியினை அன்னோர் கழுத்து நடுங்கும்படி அவரது தலையிற் சுமத்தி அவர்களை அவ்விடத்திலேயே சுற்றித் திரியும்படி தண்டித்து வருத்தும் தெய்வம் ஒன்று இவ் விடத்தில் நிலைபெற்றிருந்தது எனவும் கூறுவர்.

> "வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
> கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிக்
> கடைமுக வாயிலும் கருந்தாழ்க் காவலும்
> உடையோர் காவலும் ஒரீஇய வாகிக்
> கட்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
> கொட்பி னல்லது கொடுத்த லீயாது
> உள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்"
>
> *(சிலப், 5. 111 - 117)*

என்பது சிலப்பதிகாரம்.

இலஞ்சி மன்றம் என்பது, கூனர் தொழு நோயாளர் முதலிய பிணியாளர்கள் தன்கண் முழுகிய நிலையில் அவர்தம் நோயினைப் போக்கி அவர்களது உடம்பு நல்ல நிறம் பெற்று விளங்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்த பொய்கையைத் தன்னகத்தேகொண்டு விளங்குவதாகும்.

"கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகுமெய் யாளரும் முழுகினர் ஆடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலஞ்செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்"
(சிலப், 5. 118 - 121)

என்பர் இளங்கோவடிகள்.

வஞ்சனையால் மருந்தூட்டப்பட்டோர், நஞ்சு உண்டு வருந்துவோர், பாம்பினால் தீண்டப் பட்டோர் முதலியோர் தன்னை வலம்வந்த அளவில் அவர்தம் துயரத்தைத் தன்னொளியாற் போக்க வல்லது நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமாகும்.

"வஞ்சம் உண்டு மயற்பகை யுற்றோர்
நஞ்சம் உண்டு நடுங்குதுயர் உற்றோர்
அழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்
கழல்கண் கூளிக் கடுநவைப் பட்டோர்
சுழல வந்து தொழத்துயர் நீங்கும்
நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமும்"
(சிலப், 5, 122 - 127)

என்பது சிலப்பதிகாரம்.

"தவ மறைந்து அல்லவை செய்யும் பொய் வேடத்தார், அரசனுக்கு உடனிருந்தே கேடுசூழும் தீய அமைச்சர்கள், பொய்ச்சான்று கூறுவோர்

பிறர் மனை நயப்போர் முதலிய கொடியோர் எவரேனும் இந்நகரத்துள் நுழைவாராயின் அவர்கள் என் கையிலுள்ள பாசக் கயிற்ருற் பிணிக்கப்பட்டு என்கையிற் சிக்கிக்கொள்வார்கள்" என்ற இவ்வொலி இந்நகரத்தின் நாற்காதவட்டகை எல்லைவரை சென்று கேட்கும்படித் தனது கடிய குரலால் உணர்த்தி அத்தகைய கொடியோர்களைத் தன் கையிலுள்ள பாசத்தாற் பிணித்துவரச்செய்து நிலத்திற் புடைத்துண்ணும் பூதமானது நிலை பெற்றுள்ள இடம் பூதசதுக்கம் எனப்படும்.

"தவமறைந் தொழுகும் தன்மையிலாளர்
அவமறைந் தொழுகும் அலவற் பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் ருளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காதம் நான்கும் கடுங்குர லெடுப்பிப்
பூதம் புடைத்துண்ணும் பூதசதுக்கமும்

(சிலப், 5. 128 - 134)

என்பர் இளங்கோவடிகள்.

அரசனுடைய செங்கோன்முறையாகிய நீதி சிறிது பிறழ்ந்தாலும், அறங்கூறும் அவையத்தாராகிய சான்ருேர் நடுவுநிலை திறம்பினுலும், அன்னேரது குற்றத்தை நாவாற் கூருது தன் கண்களில் கண்ணீர் மல்கி வழிய அழுங் குறிப்பினுல் நகர மாந்தர்க்குப் புலப்படுத்தவல்ல தெய்வத்தன்மை வாய்ந்த பதுமையின் உருவம் அமைந்த அம்பலம் பாவை மன்றம் எனப்படும்.

"அரைசுகோல் கோடினும் அறங்கூ றவையத்து
உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவைநீர் உகுத்துப்
பாவைநின் றழூஉம் பாவை மன்றமும்"

(சிலப், 5. 135 - 138)

என்பது சிலப்பதிகாரம்.

இவ்வாறு உண்மையுணர்ந்த பெருமக்களாற் போற்றத்தக்க தெய்வத்தன்மை வாய்ந்த ஐந்து மன்றங்கள் இந்நகரத்திலே இருந்தனவாக இளங்கோவடிகள் கூறியவற்றைக் கூர்ந்து நோக்குங்கால், அவ்வடிகள் காலத்தில் இந் நகரத்தே வாழ்ந்த பெருமக்கள் அரச நீதிக்கு அடங்கி அறநெறியிலும் பொருள் வளத்திலும் குறைபாடின்றி வானுலக வாழ்வினை யொத்த இன்ப வாழ்க்கையில் திளைத்திருந்தார்கள் என்ற உண்மை நன்கு புலனாதல் காணலாம்.

கடல் வாணிகச் சிறப்பு

காவிரிப்பூம்பட்டினமாகிய இவ்வூர் முற் காலத்தில் கடல் வழியே வரும் மரக்கலங்கள் கரை யளவும் வந்து பண்டங்களை யேற்றிச் செல்லுதற் கேற்ற இயற்கைத் துறைமுகமாக விளங்கியது. பல நாட்டுப் பண்டங்களை நிறைய ஏற்றிக்கொண்டு இத்துறைமுகத்தை நோக்கிவரும் பெரிய கப்பல்கள் பாய்மரங்களைத் தாழ்த்தாமல் இந்நகரத்தின் கரையை அணுகிச் சரக்குகளை எளிதில் இறக்கின என்ற செய்தி,

... ... கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம், தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடல்பல் தாரத்த நாடுகிழவோயே''

(புறம். 30.)

எனச் சோழன் நலங்கிள்ளியை உறையூர் முது கண்ணன் சாத்தனுர் பாடிய பாடலிற் குறிக்கப் பெற்றிருத்தல் காணலாம். இவ்வாறு கடல் வாணிகத்துக்கேற்ற முறையில் இயற்கைத் துறைமுகமாக விளங்கிய இந்நகரம், கரிகால் வளவன் முதலிய பெரு வேந்தர்களின் உலையா ஆக்கத்தாலும், வெற்றித் திறத்தாலும் மேலும் பல செயற்கை வசதிகளையும் கடல் நடுவே இரவில் திசை அறியாது செல்லும் மரக்கலங்களை அழைக்கும் கலங்கரைவிளக்கம் முதலிய சாதனங் களையும்பெற்றுத் தமிழ்நாட்டின் வாணிகவளர்ச்சிக் கேற்ற, பேரூராகத் திகழ்வதாயிற்று.

பல்பொருள் வளங்கள்

கடல் வழியாகக் கப்பலில் வந்த குதிரைத் திரள்களும், கரியமிளகுப்பொதிகளும், வடமலையிற் பிறந்த ஒளிமிக்க நன்மணிகளும், பொதியின் மலையிலே பிறந்த சந்தனமும், தென்றிசைக் கடலிற் பிறந்த பவளமும், கங்கையாறு பாயும் வடநாட்டி லுண்டாகிய விளைபொருள்களும், காவிரிநதி பாயும் சோழ நாட்டில் விளைந்த நெல் முதலியனவும், ஈழநாட்டிலிருந்து வந்த நுகர் பொருள்களும்,

கீழ்நாடாகிய கடாரத்திலுண்டாகியபொருள்களும், சீன தேயம் முதலியவற்றிலிருந்து வந்த பச்சைக் கர்ப்பூரம் முதலிய அரும்பொருள்களும் இப்புகார்த் துறைமுகத்தில் மலைபோற் குவிந்திருந்த தோற்றத்தைப் பட்டினப்பாலையில்,

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்"

(பட்டினப்பாலை, 185 - 193)

என உருத்திரங்கண்ணனார் உள்ளவாறு விரித்துக் கூறியுள்ளார். கடல் வாணிகத்தால் இந்நகரத்தில் வந்து குவிந்துள்ள செல்வ வளத்தை நேரிற் கண்டுணர்ந்த சேர முனிவராகிய இளங்கோ அடிகள்,

"முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவா வளத்த தாகி
அரும்பொருள் தரூஉம் விருந்திற் றேஎம்
ஒருங்கு தொக்கன்ன உடைப்பெரும் பண்டம்"

(சிலப், மனையறம், 3 - 6)

என இவற்றைச் சிறப்பித்துப் பாராட்டுகின்றனர். பண்டை நாளில் இந்நகரத்தில் வாழ்ந்த வணிகப் பெருமக்கள் தம்முள் ஒற்றுமையுடையவராய்க்

கடல் கடந்து கடாரம், சாவகம், சீனம் முதலிய புறநாடுகளுக்குச் சென்று வாணிகம் புரிந்து பொருளீட்டியதுடன் தாம் சென்று தங்கிய புற நாடுகளிலும் தமது தாய்நாடாகிய தமிழ்நாட்டிலும் நல்லறங்கள் பலவற்றை விரும்பிச்செய்து புகழுடன் வாழ்ந்தமை பண்டை இலக்கியங்களாலும் அவர்கள் அறஞ்செய்த ஊர்களிற் காணப் படும் அறநிலையங்கள் கல்வெட்டுகள் முதலிய வரலாற்றுச் சான்றுகளாலும் நன்கு தெளியப் படும்.

வேந்தர்களும் புலவர்களும்

இந்நகரத்தில் வீற்றிருந்து செங்கோலோச்சிய பெருவேந்தர்களுள், நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, கரிகால்வளவன், சேட்சென்னி நலங் கிள்ளி, கிள்ளிவளவன் என்போர் குறிப்பிடத் தக்கவராவர். இவர்களது ஆட்சித் திறத்தையும் பிற நலங்களையும், பத்துப்பாட்டு, புறநானூறு முதலான பழந் தமிழிலக்கியங்களால் நன் குணரலாம். கடைச்சங்க காலத்தில் இந்நகரத்தில் தோன்றிச் செந்தமிழ் வளர்த்த பெரும்புலவர்கள்,

காவிரிப்பூம்பட்டினத்துக்கந்தரத்தனார்,
காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார்,
காவிரிப்பூம்பட்டினத்துச்சேந்தன்கண்ணனார்,
காவிரிப்பூம்பட்டினத்துச்செங்கண்ணனார்,
காவிரிப்பூம்பட்டினத்துப்பொன்வாணிகனார்மகனார் நப்பூதனார்

என்போராவர். இவர்களுள் நப்பூதனார் என்பார்

பத்துப்பாட்டுள் ஒன்ருகிய "முல்லைப்பாட்டு" என்னும் அழகிய பனுவலைப் பாடிய புலமைச் செல்வராவர். கரிகால்வளவனது வெற்றித் திறத்தையும் கொடைச் சிறப்பையும் அவன் அரசு வீற்றிருக்கும் திருவுடை நகராகிய பூம்புகாரின் பெருமையினையும் பாராட்டுமுகமாகப் பத்துப் பாட்டுள் ஒன்ருகிய " பட்டினப்பாலையைப் பாடி இந்நகரத்தில் கரிகால்வளவன்பேரவையில் அதனை அரங்கேற்றிப் பதினுறுநூருயிரம் பொன்னுடன் பட்டிமண்டபத்தையும் பரிசிலாகப்பெற்ற பெரும் புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனுராவர். இவரால் பட்டினப்பாலையிற் சிறப்பிக்கப் பெற்ற பெருமை வாய்ந்தது, காவிரிப்பூம்பட்டினமாதலால் பட்டினம் என்ற பெயர் இந்நகருக்கே தொன்று தொட்டு வழங்குவதாயிற்று. சோழ மன்னர்களின் கல்வெட்டுகளிற் பட்டினப்பெருவழி எனக் குறிக்கப்பட்டது, காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்லும் பெருவழியேயாகும். கரிகால்வளவனல் ஆதரிக்கப்பெற்ற இப்பெரும்புலவர் அவனுக்குப் பின் நெடுங்காலம் உடல்நலத்துடன் வாழ்ந் திருந்தார்; பிற்காலத்தில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த சோழர்கிளையினனுகிய தொண்டைமான் இளந்திரையனது பெருமையினையும் கொடைத்திறத்தையும் பாராட்டுமுகமாகப் பெரும்பாணுற்றுப்படை என்ற பாடலைப் பாடியுள்ளார்.

கரிகால்வளவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பொருநராற்றுப்படை என்ற பனுவலைப் பாடிய முடத்தாமக்கண்ணியார், அவ்வேந்தர் பெருமானது வீரத்தினைப் புகழ்ந்து போற்றிய வெண்ணிக்குயத்தியார், கருங்குளவாதனார் என்ற புலவர் பெருமக்களும், அம்மன்னன் அரசு வீற்றிருந்த இப்புகார் நகரத்தில் தங்கியிருந்து தமிழ் வளர்த்த சான்றோர் எனக்கொள்ளுதல் பொருந்தும்.

கற்புடைமகளிர்

கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்துத் தன் கணவனை உணவு முதலியவற்றால் பேணி, தம் இருவர் வாழ்விலும் நற்புகழ் பெருக நற்குண நற்செய்கைகளில் உறுதியுடையவளாய் நடப்பவளே பெண் என்றும், தனக்குத் தெய்வமாவான் தன் கணவனே என எண்ணி வைகறையில் துயிலெழும் பொழுதே அவனைத் தொழுதுகொண்டு எழுமியல்புடைய பெண், உலக நன்மை கருதி மேகத்தை நோக்கி "மழை பெய்க" என்று சொன்ன அளவில் அது பொழியும் என்றும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் கற்புடைப் பெண்டிரது சிறப்பைப் புலப்படுத்தியுள்ளார். இவ்வாறு தன் கற்பின் திறத்தால் தெய்வத்தையும் ஏவல்கொள்ளவல்ல பத்தினிப் பெண்டிர் வாழும் நாடு பருவகாலந்தோறும் மழையினைப் பெற்றுக் குறையாத விளைவையுடையதாய்த் தன்னை ஆளும் வேந்தர்க்கு மென்மேலும் வெற்றியைத் தந்து விளங்கும் என்பர் பெரியோர்.

தமிழின் தவக்கொழுந்து கண்ணகி

இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன் இப் புகார் நகரத்திலே வாழ்ந்த மாநாய்கன் என்னும் பெருங்குடி வணிகனுக்கு மகளாய்த் தோன்றி, மாசாத்துவான் மகன் கோவலன் என்பானுக்கு வாழ்க்கைத் துணைவியாய் அமைந்த கண்ணகி என்னும் கற்புடை நங்கை, தன் துயர் காணுது கணவனேடு மதுரைக்குச் சென்ற நிலையில், அங்கே தனது காற்சிலம்பினை விற்கச் சென்ற தன் கணவன் வஞ்சனையால் கொல்லப்பட்டது கேட்டுச் சீறியெழுந்து பாண்டியனது பேரவையில் தன் கணவன் கள்வனல்லன் என மெய்பித்ததும், தன் கற்பின் திறத்தால் மதுரை மூதூரைத் தீக்கிரை யாக்கியதும், பின்னர் சேரநாடடைந்து வேங்கை மர நீழலில் இருந்தபொழுது தன் கணவனெடு வானேர் வந்தழைக்க விண்ணக மாந்தர்க்கு விருந்தாய்ப் புக்கதும், அதனைக் கேட்டறிந்த சேரன்செங்குட்டுவன் என்னும் வேந்தர் பெருமான் தனது நாட்டிற் புகுந்த பத்தினிக் கடவுளாகிய அவ்வன்னைக்கு இமயத்திலிருந்து கற்கொணர்ந்து திருவுருவமைத்து வஞ்சிமா நகரிற் கோயில் கட்டிக் கடவுள் மங்கலஞ் செய்ததும், அவ்விழாவிற்கு வந்திருந்த மன்னர்களாகிய குடகக் கொங்கரும், மாளுவ வேந்தரும், கடல்சூழ் இலங்கைக்கயவாகு வேந்தனும் கண்ணகி தேவியை வேண்டித் தத்தம் நாட்டில் கோயில் கட்டி வழிபாடியற்றியதும்,

இவற்றையெல்லாம் நேரிலுணர்ந்த சேர முனிவ ராகிய இளங்கோவடிகள் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குச் செந்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் கோயில் அமைத்து வழிபட்ட திறம் ஆகியவை தமிழ் மக்கள் அனைவருக்கும் தெரிந்த பழைய வரலாற்று நிகழ்ச்சிகளேயாகும்.

"இவளோ,
கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி"

(சிலப். வேட்டுவவரி, 47 - 50)

எனக் கொற்றவையாகிய தெய்வமும்,

"என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்"

(சிலப், அடைக்கலக், 137 - 144)

எனக் கவுந்தியடிகளாகிய தவச் செல்வியும் உள முவந்து பாராட்டிப் போற்றிய கண்ணகி என்னும் கற்புடைத் தெய்வம் தமிழ்நாடு செய்த தவப்பேருக இப்புகார் நகரத்திற் பிறந்தமை யொன்றே இம் மூதூரின் பழம் பெருமைக்குச் சிறந்த சான்ருகும்.

இவ்வாறு கற்புடைத் தெய்வமாகப் போற்றப்படும் கண்ணகி இந்நகரில் தோன்றுவதற்கு முன்னரே தம் கற்பின் திறத்தால் நாட்டினை உய்விக்கவல்ல பத்தினிப் பெண்டிர் பலர் இப்புகார் நகரத்திற் பிறந்து சிறப்புடைய நல்வாழ்வுநடத்தியுள்ளார்கள்.

பாண்டியன் பேரவையில் வழக்குரைத்து வென்ற கண்ணகியார் பாண்டியனோடு உயிர் துறக்கும் நிலையிலுள்ள கோப்பெருந்தேவியை நோக்கித் தான் பிறந்த ஊராகிய புகார் நகரத்தில் வாழ்ந்த பத்தினிப் பெண்டிர் எழுருவடைய வரலாறுகளைத் தொகுத்துக் கூறி, "மட்டார் குழலார் பிறந்த அப்பதியிற் பிறந்த யானும் நிறையுடையேன் என்பது உண்மையானல் மதுரையை அரசோடு ஒழிப்பேன்" என வஞ்சினங் கூறுவதாக அமைந்தது சிலப்பதிகாரத்தி லுள்ள வஞ்சினமாலை என்ற கலிவெண்பாட்டாகும். கண்ணகியாற் பாராட்டப்பெற்ற கற்புடை மகளிர் எழுவர் இப்புகார் நகரத்திற் பிறந்து வாழ்ந்தார்கள் என்ற இவ்வரலாறு இந்நகரத்துக்கேயன்றி இந் நாடு முழுவதற்கும் சிறப்பளிப்பதாகும்.

கலைச்செல்வி மாதவி

நாடகக் கணிகை மரபிற்பிறந்து ஆடல் பாடல் அழகு மூன்றும் ஒருங்கே வாய்க்கப்பெற்று நாடக நன்னூலை நன்கு பயின்று, மன்னன் பேரவையிலே ஆடிக்காட்டி ஆயிரத்தெண் கழஞ்சு நிறையுள்ள பசும்பொன்மாலையைப் பரிசாகப் பெற்ற கலைச்

செல்வியாகிய மாதவி, தன் காதற் கொழுநனுகிய கோவலன் மதுரையிற் கொலையுண்டமை கேட்டு ஆற்ருது இவ்வுலக இன்பங்களைவெறுத்து அறவண அடிகள் அறவுரைப்படி புத்த சமயத்தைப் பின் பற்றித் துறவடைந்ததும், கோவலனுக்கு மகளாய் அவள் வயிற்றிற் பிறந்த மணிமேகலை தன் இளம் பருவத்திலேயே துறவுபெற்றுத் தவக்கோலமுடைய வளாய்ப் புகார் நகரத்தும், இலங்கையிலும், வஞ்சி நகரத்திலும் சென்று புத்தசமய அறவுரைகளை எடுத்துரைத்து ஏழைகளின் பசிதீர அமுதளித்துக் காஞ்சி நகரத்தை யடைந்து அங்கே பேரின்ப நிலையாகிய வீடுபேறெய்தியதும் ஆகிய வரலாற்றுச் செய்திகள் கற்புடைப் பெண்டிர் பலர் வாழ்ந்த இப்புகார் நகரத்தின் உயர்ந்த மக்கட்பண்பினை நன்கு புலப்படுத்துவனவாகும்.

பொதுவறு சிறப்பிற் புகார்

முடியுடை வேந்தர் மூவருள்ளும் தொடி விளங்கு தடக்கைச் சோழர்குலத்துதித்த பெரு வேந்தர்களுடைய செங்கோல் முறையாகிய அற நெறியும், இமயம்வரை படையெடுத்துச் சென்று அம்மலைமீது புலியிலச்சினையைப் பொறித்த அன்னோர்தம் பெருமைமிக்க வீரச்செயலும், செயற் கரிய செயல்களைச் செய்து முடிக்கவல்ல அவர்தம் பேராற்றலும் அவர்கீழ் வாழ்ந்த சோழநாட்டுக் குடிமக்களது நற்பண்புகளும் அன்னோரது உலையா

உழைப்பினாலும் இயற்கை வளத்தாலும் அந் நாட்டிலுள்ளவாம் உணவுப் பெருக்கமும், அந் நாட்டை வளப்படுத்தும் தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும், மக்கள் மேற்கொண்டு செய்த பல்வகைத் தொழில் நலமும், வாணிக வளர்ச்சியும், இயல் இசை நாடகம் சிற்பம் ஓவியம் முதலிய கலைத் திறங்களும் இவையனைத்தும் ஒருங்கே கண்டு களித்தற்குரிய நிலைக்களமாய்த் திகழ்ந்த காவிரிப் பூம்பட்டினமாகிய இம்மூதூர், தமிழ்மக்களது தீவினைப்பயனால் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட கடற்பெருக்கால் சிதை வுற்றழிந்தமை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலை யென்னும் காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகளும் மணிமேகலை ஆசிரியர் சாத்தனாரும் ஒருகாலத்தில் வாழ்ந்த வர்கள் என்பது அவ்விரு காப்பியங்களின் முகப்பில் அமைந்த பதிகங்களால் நன்கு விளங்கும். எனவே காவிரிப்பூம்பட்டினம் கடல்கோளாற் சிதைவுற்றமை சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ வடிகட்குத் தெளிவாகத் தெரிந்த செய்தியேயாதல் வேண்டும். சேரன் செங்குட்டுவனும் அவன் தம்பியாகிய இளங்கோவடிகளும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் நற்சோணை வயிற்றிற் பிறந்த சகோதரர்களாவர். தம் இளம் பருவத்திலேயே



வில்லேந்திய வேலன் (சாய்க்காடு)



உமா தேவியார் (பல்லவனீச்சரம்)

தன் தாய்ப்பாட்டன் ஆட்சிபுரிந்த சோழநாட்டின் தலைநகரமாகிய இப்புகார் நகரத்திற் பல்வேறு இடங்களையும் சென்று கண்டு இந்நகரப் பெரு மக்களுடன் நெருங்கிப் பழகியவர் இளங்கோ அடிகள். புலமைச் செல்வராகிய அம்முனிவர் இறைவன் எழுந்தருளிய இமயமலை, அகத்திய முனிவர் இருப்பிடமாகிய பொதியமலை என்னுந் தெய்வத் தலங்களுடன் தவச் செல்வர்கள் வாழும் இப்புகார் நகரத்தையும் இணைத்துப்போற்று முகத்தால் இப்புகார் நகரம் நெடுங்காலம் அழியாது நிலை பெறுக என வாழ்த்துவதல்லது இந் நகரத் திற்கு ஒடுக்கங்கூறுதல் ஒண்ணாது எனச் சிலப்பதிகார நூன்முகத்தே மங்கலவாழ்த்துப் பாட லில் தம் மனக் கருத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

''ஆங்கு,
பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய என்ப தல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே''

(சிலப். மங்கல. 13 - 19)

எனவரும் மங்கல வாழ்த்துப் பகுதியில் செந்தமிழ்ப் புலமை நலம் வாய்ந்த முனிவராகிய அவ்வடிகளாற் போற்றி வாழ்த்தப்பெற்ற இப்புகார் நகரம், கடல் கோள் முதலிய இயற்கை மாற்றங்களால் மேலும் சிதைவுறாது அதன் ஒரு பகுதியையேனும்

நம்மனோர் கண்டு மகிழும் நிலையில் நிலைபெற்றிருப்பது, நம் தமிழ் மக்களது தவப்பேறேயாகும். கடல்கோளுக்குத் தப்பிய நிலையில் எஞ்சியுள்ள இந்நகரப் பகுதியும் பிற்காலத்தில் ஏற்பட்ட போர் முதலிய அரசியல் மாறுபாடுகளாலும் உரிமையிழந்த நிலையில் நாட்டுமக்களது விழிப்பின்மையாலும் தன்கண் அமைந்த அரண்மனைகளும் கோயில்களும் மாடமாளிகைகளும் சிதைந்தொழியப் பிற்காலத்தில் தனது தொன்மையுருவம் மாறிப் பொலிவிழந்து காணப்படுவதில் வியப்பொன்றுமில்லை.

புகாரிலமைந்த பௌத்தப்பள்ளி
(கி. பி. 4-ஆம் நூற்றாண்டு)

கி. பி. நான்காம் நூற்றாண்டில் சோழநாட்டுத் தலைநகராகிய உறையூரிற் பிறந்து வளர்ந்த புத்ததத்தன் என்பான், இருமுறை இலங்கைக்குச் சென்று பௌத்த சமய நூல்களை நன்கு பயின்று பின்னர்ச் சோழ நாட்டிற்குத் திரும்பி வந்து அபிதம்மாவதாரம், விநயவிநிச்சயம் என்ற இரு நூல்களையும் பாலி மொழியில் எழுதி வெளியிட்டனன். அவற்றுள் அபிதம்மாவதாரம் என்ற நூலை அரண்மனைகளும் பூஞ்சோலைகளும் செல்வம் நிறைந்த வணிகர்களும் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் கணதாசனால் அமைக்கப்பட்டிருந்த பௌத்தப் பள்ளியில் தான் தங்கியிருந்தபொழுது

சுமதியென்ற மாணவன் வேண்டிக்கொண்டவாறு எழுதி முடித்த செய்தியை அந்நூலின் இறுதியிற் புத்ததத்தன் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். *இக்குறிப்பினைக் கூர்ந்து நோக்குங்கால் காவிரிப் பூம்பட்டினமாகிய இம்மூதூர் கி. பி. நான்காம் நூற்றுண்டில் வளமார்ந்த சோலைகளையும் சிறந்த அரண்மனைகளையும் செல்வப் பெருக்கமுடைய வணிகர் குழுவினையும் புத்தவிகாரம் முதலிய சமய நிலையங்களையும் தன்பாற்கொண்ட திருவுடை நகரமாகத் திகழ்ந்த செய்தி நன்கு புலனும்.

தேவார ஆசிரியர்கள்
(கி. பி. 7-ஆம் நூற்றுண்டு)

கி. பி. ஏழாம் நூற்றுண்டில் செந்தமிழும் சிவ நெறியும் வளரத் திருவவதாரஞ் செய்தருளிய அருளாசிரியர்களாகிய திருஞானசம்பந்தப் பிள்ளை யாரும் திருநாவுக்கரசடிகளாரும் இப்புகார் நகரப் பகுதியில் அமைந்த பல்லவனீச்சரம், திருச்சாய்க் காடு, திருவலம்புரம், திருக்கலிக்காமூர் முதலிய திருக்கோயில்களை யிறைஞ்சித் தேவாரத் திருப் பதிகங்களாகிய பாமாலைகளைப் பாடிப் போற்றி யுள்ளார்கள்.

"பழியிலார்கள் பயில்புகாரிற் பல்லவனீச்சரம்"
"பங்கமில்லார் பயில்புகாரிற் பல்லவனீச்சரம்"
"காரரக்குங் கடல்கிளர்ந்த காலமெல்லா முணரப்
பாரரக்கம் பயில்புகாரிற் பல்லவனீச்சரம்"

---
* *தமிழிலக்கிய வரலாறு. இருண்டகாலம். பக். 20-21*

எனவரும் ஆளுடைய பிள்ளையார் திருப்பாடற் றொடர்களால் இப்புகார் நகரத்தில் உயர்ந்தோர் உண்மையும் இந் நகர்க்கு ஒடுக்கங் கூறுமையும் போற்றப்படுதல் காணலாம்.

"போரார் வேற்கண்மாதர் மைந்தர் புக்கிசை பாடலினாற்
பாரார்கின்ற பட்டினத்துப் பல்லவனீச்சரமே"

எனவும்,

"தண்டுடுக்கை தாளம்வீணை சாரநடம் பயில்வார்
பண்டிடுக்கண தீரநல்கும் பல்லவனீச்சரமே"

எனவும் வரும் தேவாரத் தொடர்கள் சிலப்பதிகாரகாலத்து இசை நாடக வளர்ச்சியையொட்டித் திருஞானசம்பந்தப்பிள்ளையார் காலத்தும் இந்த நகரத்தில் இசையும் நாடகமும் ஆகிய கலைத் துறைகள் வளர்க்கப்பெற்ற திறத்தை நன்கு அறிவுறுத்தல் காணலாம்.

புகாரில் பிறந்த அருட்செல்வர்கள்

தேவார ஆசிரியர்கள் வாழ்ந்த காலத்தையொட்டி இப்புகார் நகரத்தில் அருட்செல்வர் பலர் தோன்றி இறைவனது திருவருட்டிறத்தை உலக மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராய்,

"இல்லையே யென்னாத இயற்பகைக்கும் அடியேன்"

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளாற் போற்றப்பெற்ற இயற்பகை நாயனர் என்னும் பெரியார் இப்புகார் நகரத்திலே செல்வம் நிறைந்த வணிகர் குடியிற் பிறந்து சிவனடியார் வேண்டுவனவெல்லாம்

இல்லையென்றுதளித்துத் தம் வாழ்க்கைத்துணைவியாருடன் சிவபெருமானது திருவடி நீழலெய்தி இன்புற்ற வரலாறு திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தில் விரித்துரைக்கப் பெற்றுள்ளது. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இப்புகார் நகரத்தில் செல்வம் நிறைந்த வணிகர் குடியிற்பிறந்த திருவெண்காடர் என்னும் பெரியார் இறைவனது திருவருட்டிறத்தினை உள்ளவாறு உணர்ந்து,

> "பாரனைத்தும் பொய்யெனவே
> பட்டினத்துப் பிள்ளையைப்போல்
> ஆருந்துறக்கை யரிதரிது"

எனச் சான்றோர் வியந்து போற்றும் வண்ணம் தம்பாலுள்ள பெருஞ் செல்வத்தைத் துறந்து பதினோராந் திருமுறையிலுள்ள கோயில் நான்மணிமாலை முதலிய அருட்பனுவல்களைப் பாடி இறைவனது திருவருட்பண்பையும், அவனுக்கு ஆட்பட்ட மெய்யடியார்களது பெருமையினையும் புலப்படுத்தி இறைவன் திருவடிநீழலிற் கலந்த வரலாறு யாவரும் அறிந்ததேயாகும்

கல்வெட்டுக் குறிப்புகள்

கி. பி. பத்தாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு முடிய அமைந்த பிற்காலச் சோழராட்சியிலும் இந்நகரத்தின் பழம் பெருமை ஓரளவு பேணப்பெற்று வந்தமையறியலாம். இந்நகரிற் பிறந்த வணிகர்கள் மணிக் கிராமத்தார்

என்ற பெயருடைய ஒரு குழுவினராய்த் தம்முள் ஒன்றுகூடிக் கடல் கடந்து சென்று கீழ்த் திசையிலுள்ள கடாரம், சாவகம் முதலிய புறநாடு களில் வாணிகம் புரிந்து பொருளீட்டி அறம்பல செய்து வந்தமை, அப் புறநாடுகளிலும் நம்நாட்டு ஊர்களிலும் காணப்படும் கல்வெட்டு முதலிய வரலாற்றுச் சான்றுகளாலும் இந்நகரத்தில் அவ் வாணிகக் குழுவினர் வாழ்ந்த இடம் மணிக்கிராமம் என்ற பெயருடன் இந்நாளிலும் வழங்கப் பெறுதலாலும் நன்கு துணியப்படும். கடைச்சங்க காலத்தில் புகார் நாட்டின் தலையூராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம் மூன்றுங் குலோத்துங்க சோழன் முதலிய சோழ மன்னர் ஆட்சிக் காலத்தில் "இராசாதிராச வளநாட்டு நாங்கூர் நாட்டுக் காவிரிப்பூம்பட்டினம்" எனக் கல்வெட்டுகளிற் குறிக்கப்பெற்றுள்ளது.

தென்னிந்திய கல்வெட்டாராய்ச்சித்துறையி னரால் 1911-ஆம் ஆண்டில் இப்புகார் நகரத்தி லுள்ள திருச்சாய்க்காட்டுத் திருக்கோயிலில் பதினொரு கல்வெட்டுக்களும் பல்லவனீச்சரத் திருக்கோயிலில் இரண்டு கல்வெட்டுக்களும் படி யெடுக்கப்பெற்றுள்ளன.

திருச்சாய்க்காடு

1. எண் 271. விக்கிரமசோழனது ஆட்சியில் மூன்றும் ஆண்டில் சாயாவனக்கோயிலிற் பொறிக் கப்பெற்றுள்ள கல்வெட்டு சிதைந்துள்ளது. அதன்

கண் "திருச்சாய்க்காடுடையார்" கங்கைகொண்ட சோழ அரையன்" என்ற தொடர்கள் மட்டும் தெளிவாகக் காணப்படுகின்றன.

2. எண். 269. செய்யுள் வடிவிலுள்ள இக் கல்வெட்டு விக்கிரம சோழனது ஆட்சியில் ஐந்தாம் ஆண்டில் பொறிக்கப்பெற்றதாகும். இதன் கண் சாய்க்காடு "புகார் நகரத்துச்சாயை" எனக் குறிக்கப்பெற்றுள்ளமை காணலாம். விக்கிரம சோழனுடைய அமைச்சருள் ஒருவனுகிய முகுந்தையர் அதிபதி திருச்சிற்றம்பலவன் என்பான் திருச்சாய்க்காட்டில் ஒரு திருமடம் அமைத்து அந்தணர் ஐம்பதின்மர்க்கு உணவளிப்பதற்கு நிலம் வழங்கிய செய்தியைக் குறிப்பது இக் கல் வெட்டாகும்.

3. எண். 367. விக்கிரம சோழனது ஆட்சியில் ஒன்பதாம் ஆண்டில் வரையப்பெற்ற இக் கல் வெட்டில் அவனது மெய்க்கீர்த்தி மட்டும் சிதையாதுளது.

4. எண். 270. செய்யுள் வடிவில் அமைந்த இக் கல்வெட்டு விக்கிரமசோழன் காலத்தில் பொறிக்கப்பட்டதாக இருக்கலாம். குணகரன் என்பான் சாயாவன நாயகர்க்கு வழிபாட்டுப் புறமாக நிலமளித்த செய்தியைத் தெரிவிப்பது இச்செய்யுளாகும்.

5. எண். 265. மூன்றாங் குலோத்துங்கன் ஆட்சியில் ஐந்தாம் ஆண்டில் வரையப்பெற்ற இக்கல்வெட்டின் கற்கள் முறைபிறழ்ந்து அடுக்கப் பட்டுள்ளமையால் இதில் குறித்த செய்தியைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இதன்கண் "ராஜாதி ராஜ வளநாட்டு நாங்கூர் நாட்டுக் காவிரிப்பூம்பட்டினம்" என்ற தொடர் காணப் படுகிறது.

6. எண். 264. இவ்வேந்தனது ஆட்சியில் 18-ஆம் ஆண்டில் வரையப்பட்ட இக்கல் வெட்டில் திருச்சாய்க்காட்டுத் திருக்கோயில் நிலத்தைப் பயிரிட்டு வந்த தேவதானக் குடிகள் இம்மன்னனது ஆட்சியின் 17-ம் ஆண்டு முடிய வுள்ள நிலவரிப் பாக்கியைக் கொடாமையால் 18-ஆம் ஆண்டில் வாணகோவரையன் தெரிவித்துக் கொண்டவாறு குடியுரிமையை இக் கோயிலுக்கே மாற்றியமைத்ததாக இராசநாராயண மூவேந்த வேளான் என்ற திருமந்திரவோலை அதிகாரியின் கையெழுத்திட்ட ஆணை வந்த மையைத் தெரிவிப்பது இக் கல்வெட்டாகும்.

7. எண். 268. இம்மன்னனது ஆட்சியில் 27-ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற இக் கல்வெட்டில் சாயக்காட்டுத் திருக்கோயிலில் உச்சிக்காலத்தில் அந்தணர்க்கு உணவளிப்பதற்கு நிலம் வழங்கிய செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

8. எண். 262. இம்மன்னனது ஆட்சியில் 35-ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டில் காலிங்கராயன் என்பான் திருச்சாய்க்காட்டுத் திருக்கோயிலுக்கு ஆண்டுதோறும் கிடைக்கக் கூடிய நெல்லில் நாள்வழிபாட்டிற்கும் திருப் பணிக்கும் பிற செலவுகளுக்கும் இவ்வளவு இவ்வளவு கொடுக்கவேண்டுமென அனுப்பிய உத்தரவு இடம் பெற்றுள்ளது.

9. எண். 266. மூன்றுங்குலோத்துங்கனது ஆட்சியில் 35-ஆம் ஆண்டில் வரையப்பெற்ற இக்கல்வெட்டு சிதைந்து காணப்படுகிறது. இது, திருச்சாய்க்காட்டு வேளாளுகிய உத்திராபதி நாயகன் என்பான் சாயாவன நாழியால் நாள் ஒன்றுக்கு எட்டு நாழி மிளகு கோயிலுக்கு அளந்து வருவதற்கு அவனிடம் குத்தகையாகக் கோயிலார் நிலமும் வீடும் அளித்த செய்தியைக் கூறுவதாகும்.

10. எண். 263. மூன்ரும் இராசராச சோழனது ஆட்சியில் 5-ம் ஆண்டிற் பொறிக்கப் பெற்ற இக்கல்வெட்டு இராசாதிராச வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு மருதமங்கலமுடையான் "மலைமேல் மருந்து" ஆகிய வானவன் விழுப் பரையன் என்பான் பெரிய தேவரது (மூன்றுங் குலோத்துங்கனது) ஆட்சியில் ஏழாம் ஆண்டில் திருச்சாய்க்காட்டுக் கோயிலுக்கு 1½ நுந்தாவிளக்கு எரிப்பதற்கென நிலம் அளித்தவன், அதனேடு

மேலும் 1½ விளக்கு எரிப்பதற்கென நிலம் விட்ட செய்தியைக் கூறுவதாகும்.

11. எண். 261. மூன்றும் இராசராச சோழன் தனது ஆட்சியின் எட்டாம் ஆண்டில் பிடாரன் நாயகன் வேண்டிக்கொண்டவாறு பராதீனப் பட்டுக் கிடந்த தேவதான நிலங்களை வாங்கி இராச ராசன் திருநந்தவனம் அமைக்கும்படி கூறிய கட்டளையினைத் திருமந்திர வோலை பண்டிதசோழ மூவேந்த வேளான் அறிவித்த உத்தரவாக அமைந்தது இக்கல்வெட்டு.

பல்லவனீச்சரம்

1. எண். 272. முதல்மாற வர்மன் சுந்தர பாண்டியனது ஆட்சியில் 17-ஆம் ஆண்டிற் பல்லவனீச்சரத் திருக்கோயிலிற் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு சிதைந்துள்ளது. இது கோயிலுக்கு நிலம் அளித்த செய்தியைக் கூறுவதாகும்.

2. எண். 273. பிற்காலத்தில் வரையப்பெற்ற இக்கல்வெட்டு சாலிவாகன சகம் கலி 4775 ஜய வருடம் ராயரவுத்தமிண்ட நாயனுர் முதலியோர், திருச்சாய்க்காட்டூர்ச் சீமை காவிரிப்பூம்பட்டினம் மாகாணம் காவிரிப்பூம்பட்டினம் பல்லவனீச்சுரர் கோயிலுக்கு வழிபாட்டுக்கும், திருவிழாவிற்கும், திருப்பணிக்கும் ஆக நிலம் வழங்கிய செய்தியைத் தெரிவிப்பதாகும்.

முடிவுரை

இதுகாறும் எடுத்துக்காட்டியவற்ருல் சோழர் தலைநகராய் விளங்கிய இக் காவிரிப்பூம் பட்டினத்தின் தொன்மையும் பெருமையும் ஒருவாறு சுருக்கமாக விளக்கப் பெற்றன. பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பண்டைத் தமிழ் நூல்களிலும் பிறவற்றிலும் இப்புகார் நகரத்தின் அமைப்பினைப்பற்றிய பலவகைக் குறிப்புகளையும் இவ்வூரில் நெடுங்காலமாக வழங்கி வரும் செவிவழிச் செய்திகளையும் இக்காலத்தில் வழங்கும் இடப்பெயர் முதலிய வரலாற்றுக் குறிப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு காவிரிப்பூப்பட்டினமாகிய இப்பழம் பதியிலும் இதனைச்சூழ அமைந்த ஊர்களிலும் வரலாற்றுப் பழமையுடையனவாகத் தென்படும் குறிப்பமைந்த சில இடங்களைப் புதை பொருளாராய்ச்சித் துறையின் துணைகொண்டு அகழ்ந்து ஆராய்ந்தால் இந்நகரத்தின் தொன்மை யமைப்பினையும் பிற சிறப்புக்களையும் இக்காலத்தார் உணர்ந்து மகிழ் வதற்குரிய பலவுண்மைகள் வெளியாகும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. நம் நாட்டின் வரலாற்றை யுணர்ந்துகொள்ளுதற்கு இன்றியமையாத இக்கலைப் பணியினை சென்னையரசினரும் இந்திய அரசினரும் மேற்கொண்டு நிறைவேற்றும்படி தூண்டுதல் தமிழ் மக்களின் நீங்காக் கடமையாகும்.

பிற்சேர்க்கை I

கழாஅர் முன்றுறை

கழாஅர் முன்றுறை என்பது காவிரிப்பூம் பட்டினத்தின் மேற்கே அமைந்த காவிரித்துறை யாகும். இப்பெயர் இக்காலத்தில் கழுதகாரன்துறை யென மருவி வழங்குகிறது. புகார் நகர மக்கள் நீராட்டு விழாவினைச் சிறப்புற நடத்தும் வாய்ப் புடையதாக அமைந்தது இக்கழாஅர்த் துறையே யாகும். புகார் நகர மக்கள் இத்துறையில் நீராடச் செல்லுதற்கென அமைந்த திருமஞ்சனப் பெருவழியைத் தண்பதப்பெருவழி எனக் கூறுவர் இளங்கோவடிகள். காவிரிக்குக் கரையெடுத்த கரிகால்வளவன் முதன்முதல் புதுப் புனலாட்டு விழாவை இத்துறையிலேயே நிகழ்த்தினன் என்றும், இவன் மகள் ஆதிமந்தியை மணந்த ஆட்டனத்தி என்னும் சேர அரச குமாரன் இப்புதுப் புனலாட்டு விழாவிற் கலந்துகொண்டு காவிரியில் நீராடியபொழுது காவிரி வெள்ளத்தால் இழுக்கப்பட்டுக் கடலை யடைந்தான் என்றும் இத் துன்ப நிலையிற் காதலனைக் காணாத ஆதிமந்தி அழுதரற்றிக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்து சென்றாள் என்றும் அந்நிலையில் அவளது பெருந் துயரைக் கண்டு உளம் இரங்கிய மருதியென்னும் நங்கை ஆட்டனத்தியை ஆதிமந்திக்குக் காட்டி விட்டுத் தான் நெஞ்சத் துணிவுடன் கடலிற்

குதித்து உயிர் துறந்து புகழ் பெற்ருளென்றும் வழங்கும் வரலாறு சங்கச் செய்யுட்களிற் பல இடங்க்ளிலும் பாராட்டிப் பேசப்பெற்றுள்ளது.

கல்லா யானை கடிபுனல் கற்றென
மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்
புனனயந்தாடும் அத்தி அணிநயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு மன்னே —

— பாணர்: அகம். 376.

முழவுமுகம் புலராக் கலிகொள் ஆங்கண்
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டெழில் பொலிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்
ஆட்டனத்தி நலனயந் துரைஇத்
தாழிருங் கதுப்பின் காவிரி வவ்வலின்
மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த
ஆதிமந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி யன்ன மாண்புகழ் பெறீஇயர்
சென்மோ வாழி தோழி —

— பரணர்: அகம். 222.

என்பன அகநானூற்றுப் பாடல்களாகும்.

காவிரி வெள்ளத்தால் இழுக்கப்பட்டுக் கடலிற்புக்க ஆட்டனத்தியை ஆதிமந்திக்குக்

காட்டிக் கடலிற்புக்கு மறைந்த மருதி யென்னும் மாண்புடை நங்கையின் தன்னலமற்ற தீரச் செயலை வெளிப்படுத்தும் நிலையில் அமைந்த இடமாக இக்காலத்து விளங்குவது மருதம்பள்ளம் என்ற பகுதியாகும். மருதிப்பள்ளம் என்ற பெயரே பிற்காலத்தில் மருதம்பள்ளம் என மருவி வழங்குகிறது.

இப்புகார் நகரில் சிவபெருமானுக்குரியனவாக அமைந்த பல திருக்கோயில்களில் ஆலமுற்றம் என்பதும் ஒன்றாகும். முக்கட்செல்வர் எழுந்தருளிய ஆலமுற்றம் என்ற இக்கோயிலைப்பற்றி அகம் 181ல் பரணர் குறித்துள்ளமை காணலாம்.

பிற்சேர்க்கை II

கடற்கரையில் கோவலன் பாடியது

1.

கரியமலர் நெடுங்கட் காரிகைமுன்
 கடற்றெய்வங் காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தார் அறனிலரென்
 றேழையம்யாங் கறிகோ மைய
விரிகதிர் வெண்மதியு மீன்கணமு
 மாமென்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையு முத்துங்கண் டாம்பல்
 பொதியவிழ்க்கும் புகாரே எம்மூர். ரு.

2.

காதலராகிக் கழிக்கானற் கையுறைகொண் டெம்பின்
 [வந்தார்
ஏதிலர் தாமாகி யாமிரப்ப நிற்பதையாங் கறிகோ மைய
மாதரார் கண்ணு மதிநிழல்நீ ரிணைகொண்டு மலர்ந்த
 [நீலப்
போது மறியாது வண்டூச லாடும் புகாரே எம்மூர். சு.

3.

மோது முதுதிரையான் மொத்துண்டு
 போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணல்மேல் வண்டல்
 உழுதழிப்ப மாழ்கி யைய
கோதை பரிந்தசைய மெல்விரலாற்
 கொண்டோச்சும் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண்
 போகாப் புகாரே எம்மூர். எ.

— சிலப், கானல்வரி.

கடற்கரையில் மாதவி பாடியது

4.
தீங்கதிர் வாண்முகத்தாள் செவ்வாய் மணிமுறுவல்
ஒவ்வா வேனும்
வாங்குநீர் முத்தென்று வைகலும் மால்மகன்போல்
வருதிர் ஐய
வீங்கோதந் தந்து விளங்கொளிய வெண்முத்தம்
விரைசூழ் கானல்
பூங்கோதை கொண்டு விலைஞர்போல் மீளும்
புகாரே எம்மூர். உஅ.

5.
மறையின் மணந்தாரை வன்பரதர் பாக்கத்து
மடவார் செங்கை
இறைவளைகள் தூற்றுவதை ஏழையம் எங்ஙனம்யாங்
கறிகோம் ஐய
நிறைமதியு மீனும் எனஅன்னம் நீள்புன்னை
அரும்பிப் பூத்த
பொறைமலிபூங் கொம்பேற வண்டாம்ப லூதும்
புகாரே எம்மூர். உகூ.

6.
உண்டாரை வெல்நறு ஊணொளியாப் பாக்கத்துள்
உறையொன் றின்றித்
தண்டாநோய் மாதர் தலைத்தருதி என்பதியாங்
கறிகோம் ஐய
வண்டால் திரையழிப்பக் கையான் மணல்முகந்து
மதிமேல் நீண்ட
புண்தோய்வேல் நீர்மல்க மாதர் கடல்தூர்க்கும்
புகாரே எம்மூர். ௩௰.

— சிலப், கானல்வரி.

உள்வரி வாழ்த்து

7.
பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன் [டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்.

சிலப், ஆய்ச்சியர்குரவை.

8.
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே.

சிலப், வழக்குரை 51 - 56.

9.
காவிரி நாடனைப் பாடுதும் பாடுதும்
பூவிரி கூந்தல் புகார்;

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை
ஓங்கரணங் காத்த வுரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை; கசு.

சிலம்பு; வாழ்த்துக்காதை
தேவந்தி சொல்

10.
முடிமன்னர் மூவருங் காத்தோம்புந் தெய்வ
வடபே ரிமய மலையிற் பிறந்து

கடுவரற் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்
சோணாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்; உ.

காவற்பெண்டு சொல்

11.
மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்படாள் காதற் கணவன் கைப்பற்றிக்
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்;
தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்; ௩.

அடித்தோழி சொல்

12.
தற்பயந்தாட் கில்லை தன்னைப் புறங்காத்த
எற்பயந் தாட்கும் எனக்குமோர் சொல்லில்லை
கற்புக் கடம்பூண்டு காதலன் பின் போந்த
பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்
பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்; ச.

13.
புறவு நிறைபுக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை; கஎ.

14.
கடவரைக ளோரெட்டுங் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யா ரம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்றிக் கெட்டுங்

குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்கா ணம்மானை
கொற்றவன்றன் பூம்புகார் பாடேலோ ரம்மானை; க அ.

15.
அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை
கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானை; சகூ.

சிலப், வாழ்த்துக்காதை.

16.
கரிகாலன் பெருவளவன் மகள்கேள்வன் கடல்புக்கான்
திருவேயோ எனவழைத்துத் திரைக்கரத்தால் தரக்
[கொண்டாள்
வரைகேள்வன் கலநோக்கி வருமளவுங் கல்லானுள்
புரைதீரப் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே. க.

17.
வன்னிமடைப் பளியோடு சான்றாக வரழைத்தான்
பன்னியகா விரிமணல்வாய்ப் பாவையைநுன் கேள்வ
[னென்றும்
கன்னியர்க ளொடும்போகாள் திரைகரையா வகை
[காத்தாள்
பொன்னனையாள் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே. உ.

18.
கூவலிற்போய் மாற்றாள் குழவிவிழத் தன்குழவி
ஆவலின்வீழ்த் தேற்றெடுத்தாள் அயனேக்கம்
[வேறென்று
மேவினள் குரக்குமுகம் வீடுடையோன் வரவிடுத்தாள்
பூவின்மேற் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே. ங.

19
முற்ருத முலையிருவர் முத்துவண்ட லயர்விடத்துப்
பெற்ருற்ரு மாண்பெண் பிறர்மணஞ்செய் யாவண்ணம்
சொற்ருர்கள் பிறந்தபெண் ணுயகனைத் தலைசுமந்தாள்
பொற்ருலி பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே. ச.

பட்டினத்தார் புராணம். பும்புகார்ச்சருக்கம்.

20.
நாகநீள் நகரொடு நாகநாடதனெடு
போகநீள் புகழ்மன்னும் புகார் நகர்.

— சிலப், மங்கல வாழ்த்து.

21.
தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார்மகளிர்.

சிலப், வாழ்த்துக்காதை. 26

22.
பூவிரி அகன்துறைக் கணைவிசைக் கடுநீர்க்
காவிரிப் பேரியாற்று அயிர்கொண்டு ஈண்டி
எக்கர் இட்ட குப்பை வெண்மணல்
வைப்பின் யாணர் வளங்கெழு வேந்தர்
ஞாலம் நாறும் நலங்கெழு நல்லிசை
நான் மறைமுது நூல்முக்கண் செல்வன்
ஆலமுற்றம் கவின் பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழின் மனை மகளிர்
கைசெய் பாவைத் துறைக்கண் இறுக்கும்
மகர நெற்றி வான்தோய் புரிசைச்
சிகரந் தோன்ருச் சேணுயர் நல்லில்
புகாஅர் நன்ருட் டதுவே.

— பரணர்: அகம் 18

23.
கனவினுள் காண்கொடா கண்ணும் கலந்த
நனவினுள் முன்விலங்கும் நாணும் — இனவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானுர்
செங்கோல் வடுவடுப்பச் சென்று
— முத்தொள்ளாயிரம், 38

24.
வெளிலிளக்குங் களிறுபோலத்,
தீம்புகார்த் திரைமுன்றுறைத்
தூங்குநாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக்கொடியும்
— பட்டினப்பாலை, 172 - 175

25.
பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சர்றயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்.
— பட்டினப்பாலை, 212 - 218

26.
முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு
கடலோத மூழ்கிப் போக
அன்னைக் குரைப்ப னறிவாய்
கடலேயென் றலறிப் பேருந்
தன்மை மடவார் தளர்ந்துகுத்த
வெண்முத்தந் தயங்கு கானற்
புன்னையரும் பேய்ப்பப் போவாரைப்
பேதுறுக்கும் புகாரே யெம்மூர்.
— தண்டியலங்காரம், இன்பம், மேற்கோள் பாடல்.

27.
பூவிரி நெடுங்கழி நாப்பண் பெரும்பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன
செழுநகர் ... ... — நக்கீரர்: அகம், 205.

28.
கொடுஞ் சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்
கடுஞ் சூள் தருகுவன் நினக்கே
— போந்தைப்பசலையார்: அகம் 110

29.
காவிரி மண்டிய சேய்விரி வனப்பிற்
புகாஅர்ச் செல்வ பூழியர் மெய்ம்மறை
— அரிசில்கிழார்: பதிற்றுப்பத்து 73.

பிற்சேர்க்கை III

காவிரியாற்றின் வடபுறத்துக் கழிமுகனமருங்கே அமைந்திருந்த காவிரிப்பூம்பட்டினம், சோழரின் தலைமைத் துறைமுகமாகத் திகழ்ந்தது. இதன்கண் அழகிற் சிறந்த மாளிகையொன்றை அரசர் எடுப்பித்துக் காத்துவந்தனர்; மேலும், அயல் நாட்டு வணிகர் இதனை இனிமையும் பயனும் அளிக்கும் உறைவிடமாகக் கருதுவாராயினர். ஒருகால், செல்வச் சிறப்புடையதாய் மிளிர்ந்த இந்த வளநகர் அழிந்தொழியவும், அவ்விடம் இன்று உயர்ந்த மணற்குவியலின்கீழ்ப் புதைந்து கிடக்கிறது.

— ஸ்மித்.

★

காவிரியாற்றின் கழிமுகத்தின்கண் இடம் பெற்ற புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினம், ஒரு காலத்தில் செல்வச் சிறப்பும் செழுமை நலமும் வாய்ந்த துறைமுகமாகத் துலங்கியது.

சோழர்கள் நிகழ்த்திய நீர்வாணிபத்தில், பருத்தி நூலாடை முதற்பொருளாக மிளிர்ந்தது. இதற்கென இவர்கள் வைத்து நடாத்திய சுறுசுறுப் புள்ள கடற்படை, ஐராவதி கங்கைக் கழிமுகங்கள் மட்டுமேயன்றி மலேயத்தீவத் தொகுதிவரை பாய் விரித்தேகவும் அஞ்சிற்றில்லை.

— ஸ்மித்.

கிழக்குக் கடற்கரையிலே, காவிரியாற்றின் வடகிளை கடலொடு கலக்கும் இடத்தில் அமைந்த தொழிற் செறிவுள்ள துறைமுகமாகிய காவிரிப் பட்டினம் அல்லது புகாரில் பிறிதொரு உறைவிடம் வகுத்துக்கொண்டனர், அயல்நாட்டு வந்தேறு குடியினர். நெடுங்காலத்திற்கு முன்னர் மறைந் தொழிந்த அந்நகரும், நகரின் முறைமுகமும், இன்று பரந்த மணல்மேட்டின் கீழ்ப் புதையுண்டு கிடக்கின்றன. யவன நாட்டு முந்திரிச்சாற்று வகைகள், விளக்குகள், ஏனங்கள் இவைகளின் இறக்குமதியைப்பற்றிச்செய்யுள்கள்(காப்பியங்கள்) பரக்கக் கூறுகின்றன.

— ஸ்மித்.

★

உறையூர் (பழைய திருச்சிராப்பள்ளி) சோழ நாட்டின் தலைநகராகவும் காவிரிப்பூம்பட்டினம் இதன் துறைமுகப்பட்டினமாகவும் விளங்கின.*

— பர்னெட்.

*மேனாட்டறிஞர் கண்ட தமிழகம்.

காலை யரும்பி மலருங் கதிரவனும்
மாலை மதியமும்போல் வாழியரோ -
வேலை
அகழால் அமைந்த அவனிக்கு மாலைப்
புகழால் அமைந்த புகார்.

காலையில் உதித்து ஒளிவிரியும் பரிதியும், மாலையில் உதிக்கும் வளரு மியல்புடைய திங்களும் போல, வாழ்வதாக; கடலாகிய அகழோடு அமைந்த புவனிக்கு, மாலையெனப் படும் புகழோடு பொருந்திய காவிரிப் பூம்பட்டினம்.

8

கிடைக்குமிடம்: மாதவி மன்றம்,

பூம்புகார்

மேலப்பெரும்பள்ளம் P.O. (வழி) திருவெண்காடு, தஞ்சை மாவட்டம்.

